# ஹைடெல்பெர்க் வினாவிடை போதனை

**(Heidelberg Catechism in Tamil)**

Translated and distributed by

Georgetown PRC, Hudsonville, MI

Translated in Tamil by : Arul Sathiyan

Edited by: Isaac Gajendran

Visit: www.fivesolasindia.com

# ஹைடெல்பெர்க் வினாவிடை போதனைக்கான முன்னுரை

நமது சீர்திருத்த சபைகளினுடைய கொள்கை மற்றும் கோட்பாடுகளின் ஒற்றுமையின் மூன்று கிரமங்களில் **(Three Forms of Unity)** இரண்டாவதாக இருக்கக்கூடிய ஹைடெல்பெர்க் வினாவிடை போதனையானது, ஜெர்மன் மாகாணத்தில் இளவரசருக்குக் கீழான ஆட்சியுரிமையுள்ள நிலப்பரப்புகளினது தலைநகராகிய ஹைடெல்பெர்க்கில் உருவானதால் அப்பெயரைப் பெற்றது. அங்கே தனது ஆட்சியில் சீர்திருத்த விசுவாசத்தைப் பேணிப் பாதுகாக்கும்படிக்கு இளவரசர் மூன்றாம் ஃபிரடெரிக் **(Elector Frederick III)**, ஹைடெல்பெர்க் பல்கலைக்கழகத்தின் பேராசிரியரான சகரியாஸ் உர்சினஸ் **(Zacharias Ursinus)**, மற்றும் அரசவையின் போதகரான காஸ்பர் ஒலெவியானஸ் **(Caspar Olevianus)** ஆகியோரிடம் வினாவிடை போதனைக்கான ஒரு கையேட்டைத் தயாரிக்கும் பணியை நியமித்தார்.

அந்த முயற்சியின் விளைவாக வினாவிடை போதனையானது வெளிவந்தது; அது இளவரசரினாலும், ஹைடெல்பெர்க் மாநாட்டினாலும் **(Synod of Heidelberg)** அங்கீகரிக்கப்பட்டு, 1563-ஆம் ஆண்டு முதன்முதலாக வெளியிடப்பட்டது. ஆறுதலளிக்கும் மையக்கருத்துடனும், இனிய இயல்புடனும், மற்றும் தனியொருவரை நோக்கிய பாணியிலும் எழுதப்பட்ட இந்த வினாவிடை போதனையானது விரைவில் தேவ ஜனங்களுடைய அன்பை வென்றது; அதே வருடத்தில் வினாவிடை போதனையின் மேலும் பல பதிப்புகள் அச்சிடப்பட வேண்டியதாக இருந்தது என்ற உண்மையின் மூலம் அது தெளிவாகிறது.

முதலாவது பதிப்பில் 128 கேள்விகளும், பதில்களும் இருந்தன. மேலும் இரண்டாவது மற்றும் மூன்றாவது பதிப்புகளில், இளவரசரின் உத்தரவின்பேரில், சபிக்கப்பட்ட விக்கிரகாராதனையாக குறிப்பிடப்படும் போப்பாண்டவர் உருவாக்கிய திருப்பலியைக் குறித்த எண்பதாவது கேள்வி சேர்க்கப்பட்டது. கர்த்தருடைய நாளில் ஏதாவது ஒரு ஆராதனையில் வினாவிடை போதனை விளக்கப்படுத்தப்படவேண்டும் என்ற எண்ணத்தோடு மூன்றாவது பதிப்பில் 129

கேள்வி மற்றும் பதில்கள் 52 கர்த்தருடைய நாட்களாக பிரிக்கப்பட்டுள்ளன. டார்ட்ரெக்ட் சபை ஒழுங்கின் **(Church Order of Dordrecht)** முறைமைக்கு இணங்க அந்த பயனுள்ள நடைமுறை இன்றும் அழியாமல் கடைபிடிக்கப்படுகிறது.

நெதர்லாந்தில் ஹைடெல்பெர்க் வினாவிடை போதனை 1566-ஆம் ஆண்டின் டச்சு மொழியில் மொழிபெயர்க்கப்பட்டது; அது விரைவில் பரவலாக விரும்பப்பட்டு அங்குள்ள சபைகளில் பயன்படுத்தப்பட்டது. பதினாறாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பல தேசிய மாநாடுகளில் வினாவிடை போதனை ஏற்றுக்கொள்ளப்பட்டது. இறுதியில் 1618-1619 - ஆம் ஆண்டுகளில் டார்ட்ரெக்ட் மாநாட்டில், சீர்திருத்த சபைகளின் கொள்கைகள் மற்றும் கோட்பாடுகளின் ஒற்றுமையின் மூன்று கிரமங்களில் ஒன்றாக ஹைடெல்பெர்க் வினாவிடை சேர்க்கப்பட்டது; அந்த இடத்தை இந்நாள்வரைக்கும் அது தக்கவைத்திருக்கிறது.

## கர்த்தருடைய நாள் 1

**கேள்வி**:1. **வாழ்விலும் மரணத்திலும் உங்களுக்கு இருக்கக்கூடிய ஒரே ஆறுதல் என்ன**?

**பதில்**: நான் என்னுடைய சரீரம் மற்றும் ஆத்துமாவுடன்,[1] வாழ்விலும் மரணத்திலும், எனக்குச் சொந்தம் அல்ல,[2] மாறாக என்னுடைய உண்மையுள்ள இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவுக்கே சொந்தம்.[3] அவர் தன்னுடைய விலைமதிப்பில்லாத இரத்தத்தினால்[4] என்னுடைய பாவங்கள் அனைத்திற்குமான விலைக்கிரயத்தை பூரணமாக செலுத்தி,[5] சாத்தானின் சகல வல்லமைகளிலிருந்தும் என்னை விடுவித்திருக்கிறார்.[6]
மேலும் பரலோகத்தில் இருக்கிற என்னுடைய பிதாவின் சித்தமில்லாமல், என்னுடைய தலையிலிருந்து ஒரு முடியும் விழ முடியாது[7] என்ற அளவிற்கு என்னை பாதுகாக்கிறார்;[8] ஆம், சகலமும் என் இரட்சிப்புக்கேதுவாகவே நடந்தேறுகிறது.[9] ஆகையால், தம்முடைய பரிசுத்த ஆவியின் மூலமாக நித்திய ஜீவனைக் குறித்து எனக்கு உறுதியளித்து,[10] இதுமுதற்கொண்டு அவருக்கென்று மனமுவந்த விருப்பத்துடன் வாழும்படிக்கு என்னை தயார்படுத்துகின்றார்.[11]

[1] 1 கொரி 6:19, 20

[2] ரோமர் 14:7-9

[3] 1 கொரி 3:23

[4] 1 பேது 1:18, 19

[5] 1 யோவான் 1:7; 2:2

[6] 1 யோவான் 3:8; எபி 2:14, 15

[7] லூக்கா 21:18; மத் 10:30

[8] யோவான் 6:39; 10:28, 29

[9] ரோமர் 8:28

[10] 2 கொரி 1:22; 5:5

[11] ரோமர் 8:14; 7:22

**கேள்வி:2. இந்த ஆறுதலிலே மகிழ்ச்சியுடன் வாழ்ந்து மரிப்பதற்கு நீங்கள் அவசியமாக அறிந்துவைத்திருக்கவேண்டிய காரியங்கள் எத்தனை?**

**பதில்:** இந்த ஆறுதலிலே நாம் மகிழ்ச்சியுடன் வாழ்ந்து மரிப்பதற்கு அவசியமாக அறிந்துவைத்திருக்கவேண்டிய காரியங்கள் மூன்று உண்டு.[1] முதலாவதாக, என்னுடைய பாவங்களும், அதனுடைய நிர்பந்தங்களும் எவ்வளவு பெரியது என்பதை அறியவேண்டும்.[2] இரண்டாவதாக, என்னுடைய எல்லாப் பாவங்களிலிருந்தும், அதன் நிர்பந்தங்களிலிருந்தும் நான் எவ்வாறு விடுவிக்கப்படமுடியும் என்பதை அறியவேண்டும்.[3] மூன்றாவதாக, அத்தகைய விடுதலைக்காக நான் தேவனுக்கு எவ்வாறு என் நன்றியுணர்வை வெளிப்படுத்துவது என்பதை அறியவேண்டும்.[4]

[1] லூக்கா 24:46-47

[2] யோவான் 9:41; ரோமர் 3:10, 19

[3] யோவான் 17:3

[4] எபே 5:8-10

# முதல் பகுதி – மனிதனுடைய நிர்பந்தமான நிலைமை

## கர்த்தருடைய நாள் 2

**கேள்வி:3. எதிலிருந்து உங்களுடைய நிர்பந்தத்தை நீங்கள் அறிந்துகொள்ளுகிறீர்கள்?**

பதில். தேவனுடைய நியாயப்பிரமாணத்திலிருந்து[1] என்னுடைய நிர்பந்தத்தை நான் அறிந்துகொள்ளுகிறேன்.

[1] ரோமர் 3:20

**கேள்வி:4. தேவனுடைய நியாயப்பிரமாணம் நம்மிடத்தில் எதை எதிர்பார்க்கிறது?**

**பதில்**: மத்தேயு 22:37-40 ஆகிய வசனங்களில் கிறிஸ்து இதை சுருக்கமாக கற்றுத்தருகின்றார்: உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்புகூருவாயாக; இது முதலாம் பிரதான கற்பனை. இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை என்னவென்றால், உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்பதே. இவ்விரண்டு கற்பனைகளிலும் நியாயப்பிரமாணம் முழுமையும் தீர்க்கதரிசனங்களும் அடங்கியிருக்கிறது.[1]

[1] லூக்கா 10:27

**கேள்வி:5. இவை அனைத்தையும் உங்களால் பூரணமாக கடைபிடிக்க முடியுமா?**

**பதில்**: நிச்சயமாக முடியாது.[1] ஏனென்றால் என்னுடைய சுபாவத்தின்படி தேவனையும், என் அயலானையும் வெறுக்கக்கூடியவனாகவே நான் இருக்கிறேன்.[2]

[1] ரோமர் 3:10; 1 யோவான் 1:8

[2] ரோமர் 8:7; தீத்து 3:3

## கர்த்தருடைய நாள் 3

**கேள்வி:6. தேவன் மனிதனை அவ்வளவு துன்மார்க்கனாகவும், நெறி தவறியவனாகவும் படைத்தாரா?**

**பதில்**: நிச்சயமாக இல்லை; தேவன் மனிதனை நல்லவனாகவும்,[1] அவனைத் தம்முடைய சாயலிலேயும்[2] படைத்தார். அதாவது, மெய்யான நீதியிலும், பரிசுத்தத்திலும், தன்னுடைய சிருஷ்டிகராகிய தேவனை அவன் சரியாக அறிந்துகொண்டு, அவரை மனதார அன்புசெய்து, நித்திய மகிழ்ச்சியில் அவரோடு வாழ்ந்து, அவரை மகிமைப்படுத்தி துதிக்கும்படிக்கே[3] அவனைப் படைத்தார்.

[1] ஆதி 1:31

[2] ஆதி 1:26, 27; கொலோ 3:10; எபே 4:24

[3] எபே 1:5, 6; 1 கொரி 6:20

**கேள்வி:7. அப்படியென்றால், மனித சுபாவத்தின் இந்த சீர்குலைவு எங்கிருந்து வருகிறது?**

**பதில்**: பரதீசிலே நம்முடைய ஆதிப்பெற்றோராகிய ஆதாம், ஏவாளுடைய பாவத்தினால் வந்த வீழ்ச்சி மற்றும் கீழ்ப்படியாமையிலிருந்தே இந்த சீர்குலைவு வருகிறது;[1] அதன் விளைவாக, நம்முடைய சுபாவமானது மிகவும் சீர்கெட்டதாக மாறி, நாம் அனைவரும் பாவத்திலே கர்ப்பந்தரிக்கப்பட்டு பிறக்கிறோம்.[2]

[1] ஆதி 3:6; ரோமர் 5:12, 18-19

[2] சங் 51:5; ஆதி 5:3

**கேள்வி:8. அப்படியானால், எந்தவொரு நன்மையையும் செய்வதிற்கு முற்றிலும் இயலாமல், தீமையான அனைத்தையும் செய்யும்படி நாட்டங்கொள்ளும் அளவிற்கு நாம் சீர்கெட்டுப்போனவர்களா?**

பதில்: ஆம், தேவனுடைய ஆவியினாலே மறுபிறப்பை அடையாதபட்சத்தில்[1] நாம் மெய்யாகவே அப்படியே இருக்கிறோம்.[2]

[1] யோவான் 3:5; எபே 2:5;

[2] ஆதி 6:5; யோபு 14:4; 15:14, 16

## கர்த்தருடைய நாள் 4

**கேள்வி:9. அப்படியென்றால், மனிதனால் செய்ய இயலாத ஒன்றை அவன் செய்யும்படிக்கு, தேவன் தன்னுடைய நியாயப்பிரமாணத்தில் எதிர்பார்ப்பது அநியாயமாக இருக்குமல்லவா?**

**பதில்**: நிச்சயமாக இல்லை.[1] ஏனென்றால் தேவன் தம்முடைய நியாயப்பிரமாணத்தில் எதிர்பார்க்கிற அனைத்தையும் செய்யகூடிய செயல்திறன் உள்ளவனாகவே மனிதனை படைத்தார்.[2] ஆனால் மனிதன் சாத்தானுடைய தூண்டுதலினாலும்,[3] தன்னுடைய சொந்த விருப்பத்தினால் உண்டான கீழ்ப்படியாமையினாலும், தானும், தனக்குப் பின்வரும் சந்ததியையும் அந்த தெய்வீக ஈவுகளை இழக்கும்படி செய்துவிட்டான்.[4]

[1] பிர 7:29

[2] யோவான் 8:44; 2 கொரி 11:3

[3] ஆதி 3:4; 3:7

[4] ரோமர் 5:12

**கேள்வி:10. அத்தகைய கீழ்ப்படியாமையையும், மீறுதலையும் தேவன் தண்டிக்காமல் விட்டுவிடுவாரா?**

**பதில்**: நிச்சயமாக எக்காரணத்தைக் கொண்டும் தண்டியாமல் விடமாட்டார். தேவன் நம்முடைய ஜென்ம பாவங்களையும், நாம் வாழும்போது செய்கின்ற நம்முடைய சொந்தப் பாவங்களையும் மிகவும் கடுமையாக வெறுக்கிறார்;[1] மேலும் "இந்த நியாயப்பிரமாண வார்த்தைகளையெல்லாம் கைக்கொண்டு நடவாதவன் சபிக்கப்பட்டவன்" என்று தாம் அறிவித்திருக்கிறபடி,[2] தம்முடைய நியாயத்தீர்ப்பில் நம்முடைய சகல பாவங்களையும் இப்போதும், நித்தியமாகவும் அவர் தண்டிப்பார்.[3]

[1] சங் 5:4, 5

[2] உபா 27:26; கலா 3:10

[3] ரோமர் 1:18; உபா 28:25; எபி 9:27

**கேள்வி**:11. **அப்படியென்றால், தேவன் இரக்கமுள்ளவரும்கூட இல்லையா?**

**பதில்**: தேவன் மெய்யாகவே இரக்கமுள்ளவர் தான்,[1] ஆனால் அதே நேரத்தில் அவர் நீதியுள்ளவராகவும் இருக்கிறார்.[2] ஆகவே தேவனுடைய மகா உன்னதமான மாட்சிமைக்கு விரோதமாக செய்யப்பட்ட பாவமானது, அதிகபட்ச தண்டனையாக, சரீரம் மற்றும் ஆத்துமாவிற்கான நித்திய தண்டனையினால்[3] தண்டிக்கப்படவேண்டும்[4] என்று தேவனுடைய நீதி எதிர்பார்க்கிறது.

[1] **யாத்** 34:6

[2] **யாத்** 20:5; **யோபு** 34:10, 11

[3] **ஆதி** 2:17; **ரோமர்** 6:23

[4] **சங்** 5:5,6

# இரண்டாவது பகுதி – மனிதனுடைய மீட்பு

## கர்த்தருடைய நாள் 5

**கேள்வி:12. தேவனுடைய நீதியான நியாயத்தீர்ப்பினால் நாம் இப்போதும், நித்தியமாகவும் தண்டனைக்கு உரியவர்களாக இருக்கிறபடியினால், அந்த தண்டனையிலிருந்து நாம் தப்பித்து, மீண்டும் இரக்கத்திற்குள்ளாக சேர்த்துக்கொள்ளப்படுவதற்கான வழி என்ன?**

**பதில்**: தேவன் தம்முடைய நீதியானது நிச்சயமாக திருப்திபடுத்தப்படவேண்டும் என்று எதிர்பார்க்கிறார்.[1] ஆகவே அவருடைய நீதியை நாம் முழுமையாக திருப்திப்படுத்தியாக வேண்டும்; நாமாகவோ அல்லது நமக்குப் பதிலாக இன்னொருவரோ அதைச் செய்யலாம்.[2]

[1] யாத் 20:5

[2] உபா 24:16; 2 கொரி 5:14,15

**கேள்வி:13. அப்படியென்றால், தேவனுடைய நீதியை நாம் திருப்திப்படுத்த முடியுமா?**

**பதில்**: எந்த வகையிலும் முடியாது;[1] மாறாக நாம் ஒவ்வொரு நாளும் நமது குற்ற உணர்வை அதிகரித்துக்கொண்டே போகிறோம்.[2]

[1] யோபு 9:2,3; 15:14-16

[2] மத் 6:12; ஏசா 64:6

**கேள்வி:14. நமக்காக தேவனுடைய நீதியை திருப்திப்படுத்தக்கூடிய ஒரு சாதாரண உயிரினம் ஏதாவது உண்டா?**

**பதில்**: எதுவுமில்லை; ஏனெனில், முதலாவதாக, மனிதன் செய்த பாவத்திற்காக தேவன் எந்தவொரு உயிரினத்தையும் தண்டிப்பதில்லை;[1] மேலும் மற்றவர்களை தேவனுடைய கோபத்திலிருந்து விடுவிக்குமளவிற்கு, பாவத்திற்கு எதிரான தேவனுடைய நித்திய கோபத்தின் உக்கிரத்தை எந்தவொரு சாதாரண உயிரினத்தாலும் தாங்கிக்கொள்ளவும் முடியாது.[2]

[1] எசே 18:20

[2] வெளி 5:3; சங் 49:8, 9

**கேள்வி:15. அப்படியென்றால், நாம் எந்த வகையான ஒரு மத்தியஸ்தரையும், மீட்பரையும் தேட வேண்டும்?**

**பதில்**: மெய்யான மற்றும் பூரண நீதியுள்ள ஒரு மனிதனாகவும்,[1] அதே நேரத்தில் படைப்புகள் எல்லாவற்றையும் பார்க்கிலும் மேலான வல்லமையுடையவருமாக இருக்கக்கூடிய, அதாவது மெய்யான தேவனாகவும்[2] இருக்கக்கூடிய ஒருவரையே நாம் தேட வேண்டும்.

[1] **1** கொரி 15:21; ரோமர் 8:3

[2] ரோமர் 9:5; ஏசா 7:14

## கர்த்தருடைய நாள் 6

**கேள்வி:16. அவர் ஏன் மெய்யான மனிதனாகவும், பூரண நீதியுள்ளவராகவும் இருக்கவேண்டும்?**

**பதில்:** பாவம் செய்த அதே மனித இயல்பே, பாவத்திற்கான முழு பரிகாரத்தையும் செலுத்தவேண்டும் என்று தேவனுடைய நீதி எதிர்பார்க்கின்றது;[1] மேலும் பாவியாக இருக்கின்ற ஒருவன் மற்றவர்களுக்காக பரிகாரத்தை செலுத்தவும் முடியாது.[2] ஆகவே நம்முடைய மீட்பரும், மத்தியஸ்தருமானவர் மெய்யான மனிதனாகவும், பூரண நீதியுள்ளவராகவும் இருக்கவேண்டும்.

[1] ரோமர் 5:12, 15

[2] 1 பேது 3:18; ஏசா 53:11

**கேள்வி:17. அவர் ஏன் மெய்யான தேவனாகவும் இருக்கவேண்டும்?**

**பதில்:** தம்முடைய தெய்வீகத்தின் வல்லமையினால், தேவனுடைய கோபத்தின் உக்கிரத்தை தன்னுடைய மனித இயல்பில் சுமந்து,[1] நீதியையும் ஜீவனையும் நமக்காக சம்பாதித்து, அதை மீட்டெடுப்பதற்காக[2] நம்முடைய மீட்பரும், மத்தியஸ்தருமானவர் மெய்யான தேவனாகவும் இருக்கவேண்டும்.

[1] 1 பேது 3:18; அப் 2:24; ஏசா 53:8

[2] 1 யோவான் 1:2; எரே 23:6; 2 தீமோ 1:10; யோவான் 6:51

**கேள்வி:18. அப்படியென்றால், ஒரே ஆள்தத்துவத்தில், மெய்யான தேவனாகவும், உண்மையும் நீதியுமுள்ள மனிதனுமாகவும் இருக்கக்கூடிய அந்த மத்தியஸ்தர் யார்?**

**பதில்:** தேவனால் நமக்கு முழுமையான ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்புமான[1] நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே[2] அந்த மத்தியஸ்தர்.

[1] 1 கொரி 1:30

[2] மத் 1:23; 1 தீமோ 3:16; லூக் 2:11

**கேள்வி:19. நீங்கள் இதை எதிலிருந்து அறிந்துகொள்ளுகிறீர்கள்?**

**பதில்:** பரிசுத்த சுவிசேஷத்திலிருந்தே இதை அறிந்துகொள்ளுகிறோம்.[1] தேவனே அதை முதலில் பரதீசில் வெளிப்படுத்தினார்; அதற்குப்பிறகு, கோத்திரத் தலைவர்கள் மற்றும் தீர்க்கதரிசிகள் மூலமாக அறிவித்து,[2] நியாயப்பிரமாணத்தின் பலிகளினாலும், சடங்குகளின் மூலமாகவும் முன் நிழலாகக் காண்பித்து,[3]

இறுதியில், தம்முடைய ஒரேபேறான குமாரன் மூலமாக[4] அதை நிறைவேற்றியுமிருக்கிறார்.

[1] ஆதி 3:15

[2] ஆதி 22:17, 18; 28:14; ரோமர் 1:2; எபி 1:1; யோவான் 5:46

[3] எபி 10:7, 8

[4] ரோமர் 10:4; எபி 13:8

**கேள்வி:20. அப்படியென்றால், ஆதாமிற்குள்ளாக எல்லா மனிதரும் வீழ்ந்துபோனதைப் போலவே, கிறிஸ்துவினால் எல்லாரும் இரட்சிக்கப்படுவார்களா?**

**பதில்**: இல்லை,[1] கிறிஸ்துவோடு ஒட்டவைக்கப்பட்டு, உண்மையான விசுவாசத்தினால் அவருடைய எல்லா ஈவுகளையும் பெற்றுக்கொள்ளுகிறவர்கள் மாத்திரமே[2] இரட்சிக்கப்படுவார்கள்.

[1] மத் 1:21; ஏசா 53:11

[2] யோவான் 1:12, 13; ரோமர் 11:20; எபி 10:39

**கேள்வி:21. உண்மையான விசுவாசம் என்பது என்ன?**

**பதில்**: உண்மையான விசுவாசம் என்பது தேவன் தம்முடைய வார்த்தையில் நமக்கு வெளிப்படுத்தியிருக்கிற எல்லா சத்தியங்களையும் குறித்து நான் கொண்டிருக்கிற நிச்சயமான அறிவு மாத்திரமல்ல;[1] மாறாக தேவன் தம்முடைய கிருபையினால், இலவசமாக, கிறிஸ்துவினுடைய தகுதியினால் மாத்திரம்,[2] மற்றவர்களுக்கு மட்டுமில்லாமல், எனக்கும்கூட பாவ மன்னிப்பு,[3] நித்திய நீதி மற்றும் இரட்சிப்பு[4] ஆகியவற்றைத் தந்திருக்கிறார் என்று பரிசுத்த ஆவியானவர்[5] சுவிசேஷத்தின் மூலமாக என்னுடைய இருதயத்தில் செயலாற்றுவதினால்[6] உண்டாகும் நிச்சயமான நம்பிக்கையுமே[7] உண்மையான விசுவாசமாகும்.

[1] யோவான் 6:69; 17:3; எபி 11:3,6;

[2] ரோமர் 3:24-26

[3] ரோமர் 5:1

[4] கலா 2:20

[5] ரோமர் 4:16, 20-21; எபி 11:1; எபே 3:12; ரோமர் 1:16; 1 கொரி 1:21; அப் 16:14; மத் 16:17; யோவான் 3:5

[6] ரோமர் 10:14, 17; மத் 9:2

[7] எபே 3:12

**கேள்வி:22. அப்படியென்றால், ஒரு கிறிஸ்தவன் அவசியம் விசுவாசிக்க வேண்டியதென்ன?**

**பதில்**: உலகளாவியதும், சந்தேகத்திற்கிடமற்றதுமான நம்முடைய கிறிஸ்தவ விசுவாசத்தின் அறிக்கைகளை, சுருக்கமாக சுவிசேஷத்தில் நமக்கு வாக்குப்பண்ணப்பட்டிருக்கிற அனைத்தையும்[1] ஒரு கிறிஸ்தவன் அவசியம் விசுவாசிக்க வேண்டும்.

[1] யோவான் 20:31; மத் 28:19, 20

**கேள்வி:23. இந்த அறிக்கைகள் என்ன?**

**பதில்**: வானத்தையும் பூமியையும் படைத்த சர்வ வல்லமையுள்ள பிதாவாகிய தேவனை விசுவாசிக்கிறேன்;

அவருடைய ஒரேபேறான குமாரனாகிய நம்முடைய நாதர் இயேசுகிறிஸ்துவையும் விசுவாசிக்கிறேன்; அவர் பரிசுத்த ஆவியானவராலே கன்னிமரியாளிடத்தில் உற்பவித்துப் பிறந்தார்; பொந்தியு பிலாத்துவின் காலத்தில் பாடுபட்டு, சிலுவையில் அறையுண்டு, மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, பாதாளத்தில் இறங்கினார்; மூன்றாம் நாள் மரித்தோரிடத்திலிருந்து எழுந்தருளினார்; பரமண்டலத்துக்கேறி, சர்வ வல்லமையுள்ள பிதாவாகிய தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார்; அவ்விடத்திலிருந்து உயிருள்ளோரையும் மரித்தோரையும் நியாயந்தீர்க்க வருவார்.

பரிசுத்த ஆவியை விசுவாசிக்கிறேன். பரிசுத்த உலகளாவிய திருச்சபையையும்; பரிசுத்தவான்களுடைய ஐக்கியமும்; பாவ மன்னிப்பும்; சரீரம் உயிர்த்தெழுதலும்; நித்திய ஜீவனும் உண்டென்று விசுவாசிக்கிறேன். ஆமென்.

**கேள்வி:24. இந்த அறிக்கைகள் எவ்வாறு பிரிக்கப்பட்டுள்ளன?**

**பதில்**: இந்த அறிக்கைகள் மூன்று பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளன: முதலாவது, பிதாவாகிய தேவனும், நமது படைப்பும்;[1] இரண்டாவது, குமாரனாகிய தேவனும், நமது மீட்பும்;[2] மூன்றாவது, பரிசுத்த ஆவியானவராகிய தேவனும், நமது பரிசுத்தமாகுதலும்.[3]

[1] ஆதி 1

[2] 1 பேது 1:18, 19

[3] 1 பேது 1:21-22

**கேள்வி**:25. **ஒரே ஒரு தேவன் மட்டும் இருக்கும்போது**,[1] **பிதா**, **குமாரன் மற்றும் பரிசுத்த ஆவி என்று ஏன் கூறுகிறீர்கள்**?

**பதில்**: தேவன் தம்முடைய வார்த்தையில், தன்னை மூன்று தனித்துவமான நபர்களாகவும், அதே சமயத்தில் ஒரே, உண்மையுள்ள, நித்திய தேவனாகவும் வெளிப்படுத்தியிருக்கிறபடியினாலே[2] அவரை பிதா, குமாரன் மற்றும் பரிசுத்த ஆவி என்று அழைக்கின்றோம்.

[1] **உபா** 6:4

[2] **ஆதி** 1:26; **ஏசா** 61:1; **யோவான்** 14:16, 17; **1 யோவான்** 5:7; **யோவான்** 1:3; **மத்** 28:19; **2 கொரி** 13:14

# பிதாவாகிய தேவன்

### கர்த்தருடைய நாள் 9

**கேள்வி:26. "வானத்தையும் பூமியையும் படைத்த சர்வ வல்லமையுள்ள பிதாவாகிய தேவனை விசுவாசிக்கிறேன்" என்று நீங்கள் கூறும்போது எதை விசுவாசிக்கிறீர்கள்?**

**பதில்:** நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நித்திய பிதாவானவர் (அவர் வானத்தையும், பூமியும், அவைகளில் இருக்கின்ற அனைத்தையும் ஒன்றுமில்லாமையிலிருந்து படைத்தார்;[1] அவைகளைத் தம்முடைய நித்திய ஆலோசனையினாலும், தெய்வீக பராமரிப்பினாலும் தாங்கி ஆளுகின்றார்),[2] தம்முடைய குமாரனாகிய கிறிஸ்துவினிமித்தம் என்னுடைய தேவனாகவும், என்னுடைய பிதாவாகவும் இருக்கிறார்; என்னுடைய ஆத்துமா மற்றும் சரீரத்திற்குத் தேவையான அனைத்தையும் அவர் எனக்குத் தந்தருளுவார்[3] என்பதில் எவ்வித சந்தேகமுமில்லாமல், நான் அவரை முழுமையாக சார்ந்திருக்கிறேன்; மேலும் இந்த அழுகையின் பள்ளத்தாக்கில் அவர் என்மீது அனுப்பும் எந்தவொருத் தீமையையும் எனக்கு நன்மைக்குரியதாக மாற்றுவதற்கு[4] ஆற்றலுடைய சர்வ வல்லமையுள்ள தேவனாகவும்,[5] விருப்பமுடைய உண்மையுள்ள பிதாவாகவும் இருக்கிறார்[6] என்பதையே விசுவாசிக்கிறோம்.

[1] ஆதி 1, 2; சங் 33:6

[2] சங் 115:3; மத் 10:29; எபி 1:3; யோவான் 5:17

[3] யோவான் 1:12, 16; ரோமர் 8:15, 16; கலா 4:5, 6; எபே 1:4-6; 1 யோவான் 3:1

[4] சங் 55:22; மத் 6:26

[5] ரோமர் 8:28; 4:21;

[6] ரோமர் 10:12; மத் 6:26; 7:9-11

## கர்த்தருடைய நாள் 10

**கேள்வி**:27. **தெய்வீக பராமரிப்பு என்று சொல்லும்போது நீங்கள் எதை புரிந்துகொள்ளுகிறீர்கள்**?

**பதில்**: சர்வ வல்லமையும், எங்கும் பிரசன்னமாயிருக்கிறதுமான தமது வல்லமையினால்,[1] தேவன் வானத்தையும், பூமியையும் மற்றும் எல்லா உயிரினங்களையும் தமது கரத்தைக்கொண்டு தாங்கி நடத்துகிறார்;[2] ஆகவே புல்லும் பூண்டும், மழையும் வறட்சியும்,[3] செழிப்பானதும் மற்றும் வறண்ட வருடங்களும், இறைட்சியும் பானமும்,[4] ஆரோக்கியமும் நோயும்,[5] செல்வமும் வறுமையையும்,[6] ஆம், இன்னும் அனைத்துக் காரியங்களும் தற்செயலாக நடக்காமல், தேவனுடைய தகப்பனுக்குரிய பாசம் நிறைந்த கரத்திலிருந்தே வருகிறது[7] என்பதையே தெய்வீக பராமரிப்பு என்று சொல்லும்போது நாம் புரிந்துகொள்ளுகிறோம்.

[1] அப் 17:25-28
[2] எபி 1:3
[3] எரே 5:24
[4] அப் 14:17
[5] யோவான் 9:3
[6] நீதி 22:2; யோபு 1:21
[7] மத் 10:29, 30; எபே 1:11

**கேள்வி:28. தேவன் எல்லாவற்றையும் படைத்து, அவையனைத்தையும் இன்றும் தம்முடைய பராமரிப்பினால் தாங்கி நிலைநிறுத்துகிறார் என்பதை அறிவதினால் நமக்கு உண்டாகும் நன்மை என்ன?**

**பதில்**: தேவன் எல்லாவற்றையும் படைத்து, அவையனைத்தையும் இன்றும் தம்முடைய பராமரிப்பினால் தாங்கி நிலைநிறுத்துகிறார் என்பதை அறிவதினால் நாம் உபத்திரவப்படும்போது பொறுமையுள்ளவர்களாகவும்,[1] செழிப்பாக வாழும்போது நன்றியுள்ளவர்களாகவும்,[2] இனிமேல் நமக்கு சம்பவிக்கப்போகும் அனைத்துக் காரியங்களிலும், எதுவும் நம்மை அவருடைய அன்பிலிருந்து பிரிக்கமுடியாது[3] என்று நம்முடைய உண்மையுள்ள தேவனும் பிதாவுமானவரின் மீது நமது உறுதியான நம்பிக்கையையும் வைத்து வாழமுடியும்.[4] ஏனென்றால் அனைத்துப் படைப்புகளும் அவருடைய கரத்தில் இருக்கிறது, அவருடைய சித்தமில்லாமல் அவைகளில் ஒன்றும் அசையவும் முடியாது.[5]

[1] ரோமர் 5:3; சங் 39:9
[2] உபா 8:10; 1 தெச 5:18
[3] ரோமர் 8:38, 39;
[4] ரோமர் 5:3-6
[5] யோபு 1:12; 2:6; மத் 8:31; ஏசா 10:15

# குமாரனாகிய தேவன்

## கர்த்தருடைய நாள் 11

**கேள்வி:29. தேவனுடைய குமாரன் ஏன் இயேசு, அதாவது, இரட்சகர் என்று அழைக்கப்படுகிறார்?**

**பதில்**: தேவனுடைய குமாரன் நம்முடைய பாவங்களிலிருந்து நம்மை இரட்சித்து மீட்கிறார்;[1] மேலும் அவரைத்தவிர நம்முடைய இரட்சிப்பிற்காக வேறு எதனையும் நாம் நாடவும் கூடாது, அவற்றில் இரட்சிப்பைக் காணவும் முடியாது[2] என்பதினால் அவர் இயேசு, அதாவது, இரட்சகர் என்று அழைக்கப்படுகிறார்.

[1] மத் 1:21

[2] அப் 4:12

**கேள்வி:30. தங்களிலும், புனிதர்களிலும், அல்லது வேறு எங்கிலும் இரட்சிப்பையும், ஆவிக்குரிய நன்மையையும் தேடுகிறவர்கள் ஒரே இரட்சகராகிய இயேசுவின் மீது விசுவாசம் வைக்கிறார்களா?**

**பதில்**: இல்லை, அவர்கள் இயேசுவின் மீது விசுவாசத்தை வைப்பதில்லை; ஏனென்றால் வெறுமனே தங்களுடைய வாயின் வார்த்தைகளால் அவர்கள் கிறிஸ்துவைக் குறித்து மேன்மைபாராட்டினாலும், தங்களுடைய கிரியைகளினாலே ஒரே மீட்பரும் இரட்சகருமாகிய இயேசுவை அவர்கள் மறுதலிக்கிறார்கள்.[1] ஒன்று, இயேசு முழுமையான இரட்சகராக இல்லாதிருக்கவேண்டும், அல்லது மெய்யான விசுவாசத்தினால் இந்த இரட்சகரைப் பெற்றுக்கொள்ளுகிறவர்கள் தங்களுடைய இரட்சிப்புக்கு அவசியமான அனைத்துக் காரியங்களையும் அவருக்குள்ளாக கண்டுகொள்ள வேண்டும்.[2] இவை இரண்டில் ஏதாவது ஒன்று மட்டுமே உண்மையாக இருக்கமுடியும்.

[1] 1 கொரி 1:13, 30; கலா 5:4

[2] கொலோ 2:20; ஏசா 9:6-7; கொலோ 1:19-20

## கர்த்தருடைய நாள் 12

**கேள்வி:31. அவர் ஏன் கிறிஸ்து, அதாவது அபிஷேகம்பண்ணப்பட்டவர் என்று அழைக்கப்படுகிறார்?**

**பதில்:** நம்முடைய மீட்பைக் குறித்த தேவனுடைய இரகசியமான ஆலோசனையையும், சித்தத்தையும் நமக்கு வெளிப்படுத்தின நம்முடைய பிரதான தீர்க்கதரிசியாகவும், போதகராகவும்[1] இருக்கும்படிக்கும், தம்முடைய சரீரத்தின் ஒரே பலியினாலே நம்மை மீட்டெடுத்து, நமக்காக பிதாவினிடத்தில் தொடர்ந்து பரிந்துபேசுகின்ற[2] ஒரே பிரதான ஆசாரியராக[3] இருக்கும்படிக்கும், தம்முடைய வார்த்தையினாலும், ஆவியினாலும் நம்மை ஆளுகை செய்து, நமக்காக தாம் சம்பாதித்த இரட்சிப்பிலே (அதன் சந்தோஷத்திலே) நம்மை ஆதரித்து, பாதுகாக்கின்ற[4] நித்திய ராஜாவாகவும்[5] இருக்கும்படிக்கும் பிதாவாகிய தேவனால் நியமிக்கப்பட்டு, பரிசுத்த ஆவியினால் அபிஷேகம்பண்ணப்பட்டிருக்கிற படியினால்,[6] அவர் கிறிஸ்து, அதாவது அபிஷேகம்பண்ணப்பட்டவர் என்று அழைக்கப்படுகிறார்.

[1] உபா 18:18; அப் 3:22; யோவான் 1:18; 15:15; மத் 11:27

[2] ரோமர் 8:34

[3] சங் 110:4; எபி 7:21; 10:14

[4] மத் 28:18; யோவான் 10:28

[5] சங் 2:6; லூக் 1:33

[6] எபி 1:9

**கேள்வி:32. ஆனால் நீங்கள் ஏன் ஒரு கிறிஸ்தவர் என்று அழைக்கப்படுகிறீர்கள்?**

**பதில்:** கிறிஸ்துவினுடைய நாமத்தை அறிக்கை செய்து,[1] நன்றியுணர்வின் ஜீவபலியாக என்னை அவருக்கு ஒப்புக்கொடுக்கவும்,[2] சுதந்திரமான நல்ல மனசாட்சியோடு இவ்வாழ்க்கையில் பாவத்திற்கும், சாத்தானுக்கும் எதிராகப் போராடவும்,[3] அதற்குப்பிறகு கிறிஸ்துவோடு சேர்ந்து அனைத்துப் படைப்புகளையும் நித்தியத்திற்கு ஆளுகை செய்யவும்[4] நான் விசுவாசத்தின் மூலமாக கிறிஸ்துவின் ஓர் அங்கமாகவும்,[5] அவருடைய அபிஷேகத்தில் பங்கெடுக்கிறவனாகவும்[6] இருக்கிறேன். ஆகவே நான் ஒரு கிறிஸ்தவன் என்று அழைக்கப்படுகிறேன்.

[1] மத் 10:32

[2] ரோமர் 12:1

[3] எபே 6:11, 12; 1 தீமோ 1:18, 19

[4] 2 தீமோ 2:12

[5] 1 கொரி 6:15

[6] 1 யோவான் 2:27; யோவேல் 2:28

## கர்த்தருடைய நாள் 13

**கேள்வி:33. நாமும் தேவனுடைய பிள்ளைகளாக இருக்கும்போது, கிறிஸ்து மட்டும் ஏன் தேவனுடைய ஒரேபேறான குமாரன் என்று அழைக்கப்படுகிறார்?**

**பதில்:** கிறிஸ்து மட்டுமே தேவனுடைய நித்தியமான மற்றும் இயற்கையான குமாரனாக இருக்கிறார்;[1] ஆனால் நாமோ கிறிஸ்துவினிமித்தம் கிருபையினால் தேவனுடைய சுவீகாரப் புத்திரர்களாக தத்தெடுக்கப்பட்டிருக்கிறோம்.[2] ஆகவேதான் கிறிஸ்து தேவனுடைய ஒரேபேறான குமாரன் என்று அழைக்கப்படுகிறார்.

[1] யோவான் 1:1; எபி 1:2

[2] ரோமர் 8:15-17; எபே 1:5, 6

**கேள்வி:34. நீங்கள் ஏன் கிறிஸ்துவை நம்முடைய கர்த்தர் என்று அழைக்கிறீர்கள்?**

**பதில்:** பொன்னினாலும், வெள்ளியினாலும் அல்ல, மாறாக தம்முடைய விலையேறப்பெற்ற இரத்தத்தினால்,[1] ஆத்துமா மற்றும் சரீரத்துடன், அனைத்துப் பாவங்களிலிருந்தும் கிறிஸ்து நம்மை மீட்டெடுத்து, சாத்தானின் சகல வல்லமைகளிலிருந்தும் நம்மை விடுவித்து, நம்மை அவருடைய உரிமை சொத்தாக மாற்றியிருக்கிறபடியினால் அவரை நாம் நம்முடைய கர்த்தர் என்று அழைக்கிறோம்.

[1] 1 பேது 1:18, 19

## கர்த்தருடைய நாள் 14

**கேள்வி:35. "அவர் பரிசுத்த ஆவியினாலே கன்னிமரியாளிடத்தில் உற்பவித்துப் பிறந்தார்" என்பதின் அர்த்தம் என்ன?**

**பதில்:** நித்தியமான தேவனுடைய குமாரனாகவும், மெய்யான நித்திய தேவனாகவும் தொடர்ந்து இருக்கின்ற கிறிஸ்து,[1] தாவீதின் வம்சத்தில் உண்மையாகத் தோன்றினவராகவும்,[2] பாவம் தவிர மற்ற எல்லாவற்றிலும் தம்முடைய சகோதரர்களுக்கு ஒப்பானவராகவும்[3] இருக்கும்படிக்கு, பரிசுத்த ஆவியானவரின் செயல்பாட்டினால்,[4] கன்னி மரியாளின் மாம்சம் மற்றும் இரத்தத்தை உடையவராய்,[5] மனித சுபாவத்தை தன்மீது ஏற்றுக்கொண்டார் என்பதே அவர் பரிசுத்த ஆவியினாலே கன்னிமரியாளிடத்தில் உற்பவித்துப் பிறந்தார் என்பதின் அர்த்தம்.

[1] யோவான் 1:1; கொலோ 1:15; சங் 2:7; ரோமர் 9:5; 1 யோவான் 5:20

[2] சங் 132:2; அப் 2:30; ரோமர் 1:3

[3] பிலி 2:7; எபி 4:15

[4] மத் 1:18; லூக் 1:35

[5] யோவான் 1:14; கலா 4:4

**கேள்வி:36. கிறிஸ்துவினுடைய பரிசுத்தமான கருத்தரிப்பு மற்றும் பிறப்பின் மூலமாக நீங்கள் பெற்றுக்கொள்ளும் நன்மை என்ன?**

**பதில்.** கிறிஸ்து நம்முடைய மத்தியஸ்தராக[1] இருக்கிறபடியால், அவருடைய மாசற்ற மற்றும் பூரணமான பரிசுத்தமானது, பாவத்தில் கர்ப்பந்தரிக்கப்பட்ட என்னையும், என்னுடைய பாவத்தையும் தேவனுடைய பார்வையில் மறைக்கின்றது.[2] இதுவே கிறிஸ்துவினுடைய பரிசுத்தமான கருத்தரிப்பு மற்றும் பிறப்பின் மூலமாக நான் பெற்றுக்கொள்ளும் நன்மையாக இருக்கிறது.

[1] எபி 2:16, 17

[2] சங் 32:1; 1 கொரி 1:30; ரோமர் 8:34

## கர்த்தருடைய நாள் 15

**கேள்வி:37. அவர் "பாடுபட்டார்" என்ற வார்த்தையின் மூலமாக நீங்கள் புரிந்துகொள்வது என்ன?**

**பதில்**: நம்முடைய சரீரத்தையும், ஆத்துமாவையும் நித்திய ஆக்கினையிலிருந்து விடுவித்து, தேவனுடைய இரக்கத்தையும், நீதியையும், நித்திய ஜீவனையும் நமக்குப் பெற்றுத்தரும்படிக்கு, கிறிஸ்து இந்த உலகத்தில் வாழ்ந்த காலம் முழுவதும், குறிப்பாக தனது வாழ்க்கையின் முடிவில், தேவனுடைய கோபத்தைத் தணிக்கக்கூடிய ஒரே பலியாக இருந்த அவருடைய பாடுகளின் மூலமாக,[1] முழு மனிதகுலத்திற்கும் எதிரான தேவனுடைய உக்கிரகோபத்தை தம்முடைய சரீரத்திலும், ஆத்துமாவிலும் தாங்கினார்[2] என்பதையே அவர் "பாடுபட்டார்" என்ற வார்த்தையின் மூலமாக நாம் புரிந்துகொள்கிறோம்.

[1] 1 யோவான் 2:2; ரோமர் 3:25, 26

[2] 1 பேது 2:24; ஏசா 53:12

**கேள்வி:38. பொந்தியு பிலாத்து நீதிபதியாக இருக்க, கிறிஸ்து அவனுக்குக் கீழ் ஏன் பாடுபட்டார்?**

**பதில்**: குற்றமில்லாதவராயிருந்தபோதும், தற்காலிகமான ஒரு நீதிபதியினாலே கிறிஸ்து தண்டிக்கப்பட்டதின் மூலமாக,[1] நம்மேல் விழவேண்டியதாக இருந்த தேவனுடைய கடுமையான நியாயத்தீர்ப்பிலிருந்து நம்மை விடுவிக்கும்படிக்கு[2] கிறிஸ்து பொந்தியு பிலாத்துவிற்குக் கீழ் பாடுபட்டார்.

[1] லூக் 23:14; யோவான் 19:4; சங் 69:4

[2] கலா 3:13-14

**கேள்வி:39. வேறு எந்தவிதமான ஒரு மரணத்தினாலும் கிறிஸ்து மரிப்பதைக்காட்டிலும், அவர் சிலுவையில் அறையப்படுவதில் வேறு ஏதாவது முக்கியத்துவம் இருக்கிறதா?**

**பதில்**: ஆம், இருக்கிறது. சிலுவையின் மரணம் தேவனால் சபிக்கப்பட்டதாய் இருக்கிறபடியினாலே,[1] கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டதின் மூலமாக என்மீது இருந்த சாபத்தை அவர் தன்மீது ஏற்றுக்கொண்டார் என்று நான் உறுதிசெய்யப்பட்டிருக்கிறேன்.

[1] உபா 21:23; கலா 3:13

## கர்த்தருடைய நாள் 16

**கேள்வி:40. மரணபரியந்தம் கிறிஸ்து தன்னைத் தாழ்த்திக்கொள்வதற்கான அவசியம் என்ன?**

**பதில்:** தேவனுடைய நீதி மற்றும் சத்தியத்தைப் பொறுத்தவரைக்கும்,[1] நம்முடைய பாவத்திற்கான திருப்தியளிக்கக்கூடிய பரிகாரபலியை தேவகுமாரனுடைய மரணத்தினால் அன்றி,[2] வேறு எதினாலும் ஏற்படுத்த முடியாது. ஆகவே மரணபரியந்தம் கிறிஸ்து தன்னைத் தாழ்த்துவது அவசியமாக இருந்தது.

[1] ஆதி 2:17

[2] எபி 2:9, 10; பிலி 2:8

**கேள்வி:41. அவர் ஏன் அடக்கமும் பண்ணப்பட்டார்?**

**பதில்.** அவர் மெய்யாகவே மரித்துவிட்டார்[1] என்பதை இதன்மூலம் நிரூபிக்கும்படிக்கு அவர் அடக்கம்பண்ணப்பட்டார்.

[1] அப் 13:29; மாற்கு 15:43-46

**கேள்வி:42. அப்படியென்றால், நமக்காக கிறிஸ்து மரித்திருக்கும்போது, நாமும் ஏன் மரிக்கவேண்டும்?**

**பதில்.** நம்முடைய மரணம் நமது பாவங்களுக்கான பரிகாரம் அல்ல; மரணத்தில் நம்முடைய பாவம் அழிக்கப்பட்டு, நித்திய ஜீவனுக்குள்ளாக நாம் உட்பிரவேசிக்கின்றோம்.[1] ஆகவே நாம் மரிப்பது அவசியமாகிறது.

[1] யோவான் 5:24; பிலி 1:23

**கேள்வி:43. சிலுவையிலே கிறிஸ்துவின் பரிகார பலி மற்றும் மரணத்திலிருந்து நாம் இன்னும் என்ன நன்மைகளையெல்லாம் பெறுகிறோம்?**

**பதில்.** கிறிஸ்துவினுடைய பரிகார பலி மற்றும் மரணத்தின் மூலமாக நம்முடைய பழைய மனுஷன் அவரோடுகூட சிலுவையில் அறையப்பட்டு, மரித்து, அடக்கம்பண்ணப்பட்டுவிட்டான்.[1] ஆகவே மாம்சத்தின் இச்சைகளும், சீர்கேடான எண்ணங்களும் இனி நம்மில் ஆட்சி செலுத்தாமல்,[2] கிறிஸ்துவிற்கு நன்றிசெலுத்தும் பலியாக நாம் நம்மையே அவருக்கு ஒப்புக்கொடுத்துவிடுகிறோம்.[3]

[1] ரோமர் 6:6,7

[2] ரோமர் 6:12

[3] ரோமர் 12:1

**கேள்வி:44. அவர் "பாதாளத்தில் இறங்கினார்" என்று சேர்க்கப்பட்டுள்ளது ஏன்?**

**பதில்.** என்னுடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, தான் அடைந்த பாடுகள் அனைத்தின்போதும், குறிப்பாக சிலுவையின் மீது அவர் அடைந்த வார்த்தையினால் விவரிக்க முடியாத வியாகுலத்தினாலும், மன நோவினாலும், பயங்கரத்தினாலும் மற்றும் நரக வேதனையினாலும், என்னை நரகத்தின் வியாகுலம் மற்றும் வேதனையிலிருந்து விடுவித்திருக்கிறார்[1] என்று என்னுடைய மகா பெரிய சோதனைகளின் நேரத்தில் நான் உறுதியாக நம்பி, அதில் என்னை முழுமையாக ஆறுதல்படுத்திக்கொள்ளும்படிக்கு அவர் "பாதாளத்தில் இறங்கினார்" என்று சேர்க்கப்பட்டுள்ளது.

[1] ஏசா 53:10; மத் 27:46

## கர்த்தருடைய நாள் 17

**கேள்வி**: 45. **கிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதல் நமக்கு அளிக்கும் நன்மை என்ன**?

**பதில்**: முதலாவதாக, தம்முடைய மரணத்தின் மூலமாக[1] கிறிஸ்து நமக்காக சம்பாதித்த அந்த நீதியில் நம்மையும் பங்குள்ளவர்களாக மாற்றும்படிக்கு, அவர் தம்முடைய உயிர்த்தெழுதலின் மூலமாக மரணத்தை ஜெயித்திருக்கிறார். இரண்டாவதாக, அவருடைய வல்லமையினால் ஒரு புதிய ஜீவியத்திற்காக நாமும் எழுப்பப்பட்டிருக்கிறோம்.[2] இறுதியாக, கிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதல் நமது ஆசீர்வாதமான உயிர்த்தெழுதலுக்கு ஒரு நிச்சயமான வாக்குறுதியாக இருக்கிறது.[3]

[1] 1 கொரி 15:16

[2] ரோமர் 6:4; கொலோ 3:1

[3] 1 கொரி 15

## கர்த்தருடைய நாள் 18

**கேள்வி: 46. அவர் "பரமண்டலத்துக்கேறினார்" என்ற வார்த்தைகளை நீங்கள் எவ்வாறு புரிந்துகொள்ளுகிறீர்கள்?**

**பதில்**: கிறிஸ்து தம்முடைய சீஷர்களுடைய கண்களுக்கு முன்பாக, பூமியிலிருந்து பரலோகத்திற்குள்ளாக எடுத்துக்கொள்ளப்பட்டார்;[1] மேலும் உயிரோடிருக்கிறவர்களையும், மரித்தோர்களையும் நியாயந்தீர்க்கும்படி அவர் மீண்டும் வரும்வரைக்கும் அவர் அங்கேயே நமக்காக வாசம்பண்ணுகிறார்[2] என்பதையே அவர் "பரமண்டலத்துக்கேறினார்" என்பதின் மூலம் நாம் புரிந்துகொள்ளுகிறோம்.

[1] அப் 1:9; மாற்கு 16:19

[2] எபி 4:14; ரோமர் 8:34; எபே 4:10

**கேள்வி: 47. அப்படியென்றால், கிறிஸ்து வாக்களித்தபிரகாரம் உலகத்தின் முடிவுபரியந்தம் நம்மோடு இருக்கவில்லையா?**

**பதில்**: கிறிஸ்து மெய்யான மனிதனாகவும், மெய்யான தேவனாகவும் இருக்கிறார். அவருடைய மனித சுபாவத்தைப் பொறுத்தவரைக்கும் இந்த உலகத்தில் அவர் இப்போது இல்லை;[1] ஆனால் அவருடைய தெய்வீகம், மாட்சிமை, கிருபை மற்றும் ஆவி ஆகியவற்றைப் பொறுத்தவரைக்கும் அவர் நம்மோடு இராத நேரமே இல்லை.

[1] அப் 3:21; யோவான் 3:13; 16:28; மத் 28:20

**கேள்வி: 48. எங்கெல்லாம் கிறிஸ்துவினுடைய தெய்வீக இயல்பு இருக்கிறதோ, அங்கெல்லாம் அவருடைய மனித இயல்பு இருப்பதில்லையென்றால், கிறிஸ்துவிலுள்ள இந்த இரண்டு இயல்புகளும் ஒன்றிலிருந்து மற்றொன்று பிரிக்கப்பட்டவைகளாக இருக்கின்றதல்லவா?**

**பதில்**: நிச்சயமாக இல்லை. தெய்வீக இயல்பு எல்லையற்றதாகவும், எங்கும் நிறைந்ததாகவும் இருப்பதினால்,[1] கிறிஸ்துவினுடைய தெய்வீக இயல்பும் அவர் ஏற்றுக்கொண்ட மனித இயல்பின் எல்லைக்கு அப்பாற்பட்டதாக இருக்கிறது.[2] ஆனாலும் அவருடைய தெய்வீக இயல்பானது, அவருடைய மனித இயல்புடன் தனிப்பட்ட முறையில் ஒருங்கிணைந்தாகவே இருக்கிறது.

[1] அப் 7:49; மத் 24:30

[2] மத் 28:20; யோவான் 16:28; 17:11; 3:13

**கேள்வி:49. கிறிஸ்துவின் பரமேறுதலினால் நமக்கு உண்டாகும் நன்மை என்ன?**

**பதில்**: முதலாவதாக, பரலோகத்தில் தம்முடைய பிதாவின் முன்னிலையில் கிறிஸ்து நமக்காக பரிந்து பேசுகிறவராய் இருக்கிறார்.[1] இரண்டாவதாக, நம்முடைய தலையாகிய கிறிஸ்து அவருடைய அங்கத்தவர்களாகிய நம்மையும் அவரோடு சேர்த்துக்கொள்வார்[2] என்பதற்கு ஒரு நிச்சயமான வாக்குறுதியாக அவரே நம்முடைய சரீரமாக பரலோகத்தில் இருக்கிறார். மூன்றாவதாக, தம்முடைய ஆவியானவரின் வல்லமையினால் நாம் பூமியிலுள்ளவைகளைத் தேடாமல்,[3] கிறிஸ்து தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடும்படிக்கு அவரையே நமக்கு அச்சாரமாக அனுப்புகிறார்.[4]

[1] எபி 9:24; 1 யோவான் 2:1; ரோமர் 8:34

[2] யோவான் 14:2; எபே 2:6-7

[3] கொலோ 3:1, பிலி 3:20

[4] யோவான் 14:16; 2 கொரி 1:22; 2 கொரி 5:5

## கர்த்தருடைய நாள் 19

**கேள்வி:50. கிறிஸ்து "பிதாவாகிய தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார்" என்று ஏன் சேர்க்கப்பட்டுள்ளது?**

**பதில்.** கிறிஸ்து திருச்சபையின் தலையாகத் தோன்றும்படிக்கு,[1] தம்முடைய பிதாவாகிய தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார். கிறிஸ்துவின் மூலமாகவே பிதா சகலத்தையும் ஆளுகை செய்கிறார்.[2]

[1] எபே 1:20-23, கொலோ 1:18

[2] மத் 28:18; யோவான் 5:22

**கேள்வி:51. நம்முடைய தலையாகிய கிறிஸ்துவினுடைய மகிமையினால் நாம் அடைகின்ற நன்மை என்ன?**

**பதில்.** முதலாவதாக, தம்முடைய பரிசுத்த ஆவியானவரின் மூலமாக அவருடைய அங்கத்தவர்களான நம்மீது பரலோக நன்மைகளை அவர் பொழிந்தருளுகிறார்.[1] இரண்டாவதாக, தம்முடைய வல்லமையினால் எல்லாச் சத்துருக்களுக்கும் எதிராக நம்மை ஆதரித்துப் பாதுகாக்கிறார்.[2]

[1] எபே 4:8

[2] சங் 2:9; யோவான் 10:28

**கேள்வி:52. கிறிஸ்து "உயிருள்ளோரையும் மரித்தோரையும் நியாயந்தீர்க்க மீண்டும் வருவார்" என்பது உங்களுக்கு அளிக்கும் ஆறுதல் என்ன?**

**பதில்.** என்னுடைய சகல துயரங்களிலும், உபத்திரவங்களிலும் என்னுடைய தலையை உயர்த்தி, முன்பு என் நிமித்தம் தேவனுடைய நியாயத்தீர்ப்பிற்கு தன்னை ஒப்புவித்து, எல்லா சாபங்களையும் என்னிடத்திலிருந்து அகற்றிய அதே கிறிஸ்து, மீண்டும் நியாயாதிபதியாக வருவதற்காக ஆவலோடு காத்திருக்கிறேன்.[1] அவர் வந்து தம்முடைய மற்றும் என்னுடைய எதிரிகளை நித்திய ஆக்கினைக்குள்ளாகத் தள்ளி,[2] என்னையோ தமக்கென்று அவரால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களோடு, நித்திய சந்தோஷத்திற்குள்ளாகவும், மகிமைக்குள்ளாகவும் அழைத்துச்செல்வார்[3] என்பதே கிறிஸ்து "உயிருள்ளோரையும் மரித்தோரையும் நியாயந்தீர்க்க மீண்டும் வருவார்" என்பது எனக்கு அளிக்கும் ஆறுதலாக இருக்கிறது.

[1] லூக் 21:28; ரோமர் 8:23, 24; 1 தெச 4:16

[2] 2 தெச 1:6-9; மத் 25:41

[3] மத் 25:34

# பரிசுத்த ஆவியானவர்

## கர்த்தருடைய நாள் 20

**கேள்வி:53. பரிசுத்த ஆவியானவரைக் குறித்து நீங்கள் விசுவாசிப்பது என்ன?**

**பதில்**: முதலாவதாக, பரிசுத்த ஆவியானவர் பிதாவோடும், குமாரனோடும் உண்மையான மற்றும் நிகரான நித்தியமுள்ள தேவனாக இருக்கிறார்.[1] இரண்டாவதாக, மெய்யான விசுவாசத்தின் மூலமாக, கிறிஸ்துவிலும், அவருடைய சகல நன்மைகளிலும் என்னைப் பங்கெடுக்கச் செய்து,[2] என்னை ஆறுதல்படுத்தவும்,[3] என்றென்றைக்கும் என்னோடு இருக்கவும்[4] எனக்கென்று அனுப்பப்பட்டவராகவும்[5] அவர் இருக்கிறார் என்பதே பரிசுத்த ஆவியானவரைக் குறித்த எனது விசுவாசமாயிருக்கிறது.

[1] ஆதி 1:2; ஏசா 48:16; 1 கொரி 3:16

[2] கலா 3:14; 1 பேது 1:2

[3] அப் 9:31

[4] யோவான் 14:16; 1 பேது 4:14

[5] மத் 28:19; 2 கொரி 1:22

**கேள்வி:54. கிறிஸ்துவினுடைய "பரிசுத்த உலகளாவிய திருச்சபையைக்" குறித்து நீங்கள் விசுவாசிப்பது என்ன?**

**பதில்**: உலகத்தின் துவக்கத்திலிருந்து அதன் முடிவுபரியந்தம்,[1] முழு மனுக்குலத்திலுமிருந்து[2] நித்திய ஜீவனுக்கென்று தெரிந்துகொள்ளப்பட்டு,[3] உண்மையான விசுவாசத்தில் ஒன்றாக இருக்கின்ற ஒரு சபையை, தேவனுடைய குமாரன் தம்முடைய ஆவியினாலும், வார்த்தையினாலும்[4] ஒன்றுசேர்த்து,[5] ஆதரித்து, தமக்குரியவர்களாக பாதுகாக்கிறார்;[6] மேலும் நான் அந்த சபையினுடைய உயிருள்ள அங்கத்தவனாக இருக்கிறேன், என்றென்றைக்கும் இருப்பேன்[7] என்பதே கிறிஸ்துவினுடைய "பரிசுத்த உலகளாவிய திருச்சபையைக்" குறித்த எனது விசுவாசமாக இருக்கிறது.

[1] யோவான் 10:11; ஆதி 26:4

[2] உபா 10:14, 15

[3] அப் 13:48

[4] ஏசா 59:21

[5] ரோமர் 9:24; எபே 1:10

[6] யோவான் 10:16

[7] 1 கொரி 1:8, 9

**கேள்வி:55. "பரிசுத்தவான்களுடைய ஐக்கியம்" என்பதின் மூலம் நீங்கள் புரிந்துகொள்ளுவது என்ன?**

**பதில்**: முதலாவதாக, கிறிஸ்துவினுடைய அங்கத்தவர்களாக இருந்து, அவரை விசுவாசிக்கின்ற அனைவருமே, அவரிலும், அவருடைய ஐசுவரியங்கள் மற்றும் வரங்களிலும் பங்கெடுக்கிறவர்களாக இருக்கின்றனர்.[1] இரண்டாவதாக, மற்ற அங்கத்தவர்களின் நன்மைகளுக்காகவும், அவர்களுடைய இரட்சிப்பிற்காகவும் ஒருவன் தன்னுடைய வரங்களை மனமார உற்சாகத்தோடு பயன்படுத்தவேண்டும் என்பது அவனுடைய கடமையாக இருக்கிறது[2] என்பதை ஒவ்வொருவரும் கட்டாயமாக அறிந்துகொள்ளவேண்டும் என்பதையே "பரிசுத்தவான்களுடைய ஐக்கியம்" என்பதின் மூலம் நாம் புரிந்துகொள்ளுகிறோம்.

[1] 1 யோவான் 1:3; ரோமர் 8:32; 1 கொரி 12:13

[2] 1 கொரி 13:5; பிலி 2:4-6

**கேள்வி:56. "பாவமன்னிப்பைக்" குறித்து நீங்கள் விசுவாசிப்பது என்ன?**

**பதில்**. கிறிஸ்துவினுடைய பரிகார பலியினிமித்தம்,[1] தேவன் என்னுடைய பாவங்களையும், என்னுடைய வாழ்க்கை முழுவதும் நான் எதிர்த்துப் போராட வேண்டிய என்னுடைய சீர்கெட்ட இயல்பையும் இனி ஒருபோதும் நினைக்கமாட்டார்;[2] மாறாக தேவனுடைய நியாயாசனத்திற்கு முன்பாக நான் இனி ஒருபோதும் தண்டிக்கப்படாதபடிக்கு, மிகுந்த இரக்கத்தோடு கிறிஸ்துவினுடைய நீதியை எனக்கு அளிக்கிறார்[3] என்பதே பாவமன்னிப்பைக் குறித்த எனது விசுவாசமாயிருக்கிறது.

[1] 1 யோவான் 1:2; 2 கொரி 5:19,21

[2] எரே 31:34; சங் 103:3, 4, 10-11; ரோமர் 8:1-3

3 யோவான் 3:18

## கர்த்தருடைய நாள் 22

**கேள்வி:57. "சரீரத்தின் உயிர்த்தெழுதல்" என்பது உங்களுக்கு அளிக்கும் ஆறுதல் என்ன?**

**பதில்**: இந்த வாழ்க்கைக்குப்பிறகு, எனது ஆத்துமா அதனுடைய தலையாக இருக்கிற கிறிஸ்துவிடம் உடனடியாக எடுத்துக்கொள்ளப்படும்[1] என்பதோடு மட்டுமல்லாமல், என்னுடைய சரீரமும் கிறிஸ்துவினுடைய வல்லமையினால் உயிர்ப்பிக்கப்பட்டு, எனது ஆத்துமாவுடன் மீண்டும் சேர்க்கப்பட்டு, கிறிஸ்துவின் மகிமையான சரீரத்திற்கு ஒப்பானதாக மாற்றப்படும்[2] என்பதே "சரீரத்தின் உயிர்த்தெழுதல்" எனக்கு அளிக்கும் ஆறுதலாக இருக்கிறது.

[1] லூக் 23:43; பிலி 1:23

[2] 1 கொரி 15:53; யோபு 19:25, 26

**கேள்வி:58. "நித்திய ஜீவனும் உண்டு" என்ற அறிக்கையின் மூலமாக நீங்கள் பெற்றுக்கொள்ளும் ஆறுதல் என்ன?**

**பதில்**: நித்திய மகிழ்ச்சியின் ஆரம்பத்தை நான் இப்போதே என்னுடைய இருதயத்தில் உணருகிறபடியால்,[1] இந்த வாழ்க்கைக்குப்பிறகு, கண் கண்டிராததும், காது கேட்டிராததும், கற்பனை செய்து பார்ப்பதிற்கு மனிதனுடைய இருதயத்திற்குள்ளாக நுழைந்திராததுமான[2] பரிபூரண இரட்சிப்பை நான் சுதந்தரித்து,[3] அதனில் தேவனை என்றென்றைக்கும் துதிப்பேன் என்பதே "நித்திய ஜீவனும் உண்டு" என்ற அறிக்கையின் மூலமாக நான் பெற்றுக்கொள்ளும் ஆறுதலாக இருக்கிறது.

[1] 2 கொரி 5:2,3,6; ரோமர் 14:17

[2] 1 கொரி 2:9

[3] சங் 10:11

## கர்த்தருடைய நாள் 23

**கேள்வி:59. ஆனால், இவையெல்லாவற்றையும் விசுவாசிப்பதினால் இப்போது உங்களுக்குக் கிடைக்கும் பயன் என்ன?**

**பதில்**: கிறிஸ்துவுக்குள் நான் தேவனுக்கு முன்பாக நீதிமானாகவும், நித்திய ஜீவனின் வாரிசாகவும் இருக்கிறேன்[1] என்பதே இவையெல்லாவற்றையும் விசுவாசிப்பதினால் இப்போது எனக்குக் கிடைக்கும் பயனாக இருக்கிறது.

[1] ரோமர் 5:1;1:17; யோவான் 3:36

**கேள்வி:60. தேவனுக்கு முன்பாக நீங்கள் எப்படி நீதிமானாக இருக்கிறீர்கள்?**

**பதில்**. இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்பதன் மூலம் மட்டுமே[1] தேவனுக்கு முன்பாக நான் நீதிமானாக இருக்கிறேன். எப்படியெனில், தேவனுடைய அனைத்துக் கட்டளைகளையும் நான் கொடூரமாக மீறி, அவைகளில் ஒன்றையும் கடைபிடிக்காமலும்,[2] இன்னும் எல்லாத் தீமைகளையும் செய்வதற்கு நாட்டங்கொள்ளுகிறவனாகவும்[3] இருக்கிறேன் என்று என்னுடைய மனசாட்சி என்னைக் குற்றப்படுத்தினாலும், நான் இதுவரைக்கும் எந்தவொரு பாவத்தையும் செய்திராததைப்போலவும், ஆம், எனக்காக கிறிஸ்து நிறைவேற்றின சகல கீழ்ப்படிதலையும் நான் நிறைவேற்றியதைப்போலவும்,[4] என்னுடைய எந்தவொரு நன்மையும் இல்லாமல்,[5] தேவன் தம்முடைய சுத்த கிருபையினால் மாத்திரமே,[6] கிறிஸ்துவினுடைய பூரணமான நிறைவையும், நீதியையும், மற்றும் பரிசுத்தத்தையும்[7] எனக்கு அளித்து,[8] விசுவாசமுள்ள இருதயத்துடன் அத்தகைய நன்மைகளை நான் பற்றிக்கொள்ளும் அளவிற்கு[9] அவைகளை என்னுடையதாக்குகிறார்.[10]

[1] ரோமர் 3:22; கலா 2:16; எபே 2:8, 9

[2] ரோமர் 3:9-18

[3] ரோமர் 7:23

[4] 2 கொரி 5:21

[5] ரோமர் 3:24

[6] தீத்து 3:5; எபே 2:8, 9

[7] ரோமர் 3:24, 25

[8] ரோமர் 4:4, 5

[9] ரோமர் 3:28; யோவான் 3:18

[10] 1 யோவான் 2:1

**கேள்வி**: 61. **விசுவாசத்தினால் மட்டுமே நீங்கள் நீதிமானாக இருக்கிறீர்கள் என்று ஏன் கூறுகிறீர்கள்?**

**பதில்**: என்னுடைய விசுவாசத்தின் தகுதியின் மூலமாக நான் தேவனுடைய பார்வையில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறேன் என்பதல்ல,[1] மாறாக கிறிஸ்துவினுடைய நிறைவும், நீதியும் மற்றும் பரிசுத்தமுமே தேவனுக்கு முன்பாக என்னுடைய நீதியாக இருக்கிறது;[2] மேலும் விசுவாசத்தினால் மட்டுமேயன்றி, வேறு எந்தவொரு வழியினாலும் நான் அவைகளைப் பெற்றுக்கொண்டு, நடைமுறைப்படுத்த இயலாது.[3]

[1] சங் 16:2; எபே 2:8, 9

[2] 1 கொரி 1:30

[3] 1 யோவான் 5:10

## கர்த்தருடைய நாள் 24

**கேள்வி:62. ஆனால், ஏன் நம்முடைய நற்கிரியைகள் தேவனுக்கு முன்பான நமது நீதியின் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ இருக்க முடியாது?**

**பதில்.** தேவனுடைய நியாயாசனத்திற்கு முன்பாக ஏற்றுக்கொள்ளப்படவேண்டிய நீதியானது முற்றிலும் பரிபூரணமானதாகவும், எல்லா வகையிலும் தேவனுடைய நியாயப்பிரமாணத்தோடு இணக்கமுள்ளதாகவும் இருக்கவேண்டும்.[1] மேலும், இந்த வாழ்க்கையில் நம்முடைய மிகச்சிறந்த கிரியைகளும்கூட பூரணமற்றதும், பாவத்தினால் கறைபடிந்ததுமாகவே இருக்கின்றன.[2] ஆகவேதான் நம்முடைய நற்கிரியைகள் தேவனுக்கு முன்பாக நமது நீதியின் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ இருக்க முடியாது.

[1] கலா 3:10; உபா 27:26

[2] ஏசா 64:6

**கேள்வி:63. நம்முடைய நற்கிரியைகளுக்கு தேவன் இந்த வாழ்க்கையிலும், இனி வரப்போகின்ற வாழ்க்கையிலும் பலன் அளிக்கும்போதும், அவைகள் தங்களில் நன்மையானதொன்றையும் கொண்டிருக்காமல் இருக்குமா என்ன?**

**பதில்:** தேவன் தருகின்ற இந்த பலன் தகுதியினால் உண்டாவதில்லை, மாறாக கிருபையினால் உண்டாகிறது.[1]

[1] லூக் 17:10

**கேள்வி:64. அப்படியென்றால், இந்த உபதேசம் மனிதர்களை அக்கறையில்லாதவர்களாகவும், தேவனை நிந்தனை செய்கின்றவர்களாகவும் மாற்றாதா?**

**பதில்.** எந்தவகையிலும் அப்படி மாற்றாது; ஏனென்றால், மெய்யான ஒரு விசுவாசத்தின் மூலமாக கிறிஸ்துவுக்குள்ளாக சேர்க்கப்பட்டவர்கள் நன்றியுணர்வின் கனிகளைக் கொடாமல் இருப்பது அரிதான காரியமாக இருக்கும்.[1]

[1] மத் 7:17,18; யோவான் 15:5

# திருநியமங்கள்

## கர்த்தருடைய நாள் 25

**கேள்வி:65. கிறிஸ்துவிலும், அவருடைய சகல நன்மைகளிலும் நாம் விசுவாசத்தின் மூலமாக மட்டுமே பங்கெடுக்கிறோம் என்றால், அந்த விசுவாசம் எங்கிருந்து வருகிறது?**

**பதில்.** பரிசுத்த ஆவியானவரிடத்திலிருந்தே விசுவாசம் வருகிறது. அவர் சுவிசேஷத்தினுடைய பிரசங்கத்தின் மூலமாக, நம்முடைய இருதயத்திற்குள் விசுவாசத்தை செயலாற்றி,[1] திருநியமங்களின் பயன்பாட்டின் மூலமாக அதை உறுதிசெய்கிறார்.[2]

[1] எபே 2:8; 6:23; பிலி 1:29

[2] மத் 28:19; ரோமர் 4:11

**கேள்வி:66. திருநியமங்கள் என்றால் என்ன?**

**பதில்:** திருநியமங்கள் தேவனாலே நியமிக்கப்பட்ட பரிசுத்த மற்றும் காணக்கூடிய அடையாளங்களாகவும், முத்திரைகளாகவும் இருக்கின்றன. அவைகளின் பயன்பாட்டினால் சுவிசேஷத்தின் வாக்குறுதிகளை தேவன் நமக்கு இன்னும் முழுமையாக அறிவித்து, அதனை முத்திரையிடுகிறார். மேலும் கிறிஸ்துவினால் ஒரேதரம் சிலுவையில் நிறைவேற்றப்பட்ட பலியின் நிமித்தம் நம்முடைய பாவத்தை ஒழித்து, நித்திய ஜீவனை இலவசமாக நமக்கு அருளுகிறார்.[1]

[1] ஆதி 17:11; ரோமர் 4:11; யாத் 12; லேவி 6:25; அப் 22:16; 2:38; மத் 26:28

**கேள்வி**: 67. **அப்படியென்றால், நம்முடைய இரட்சிப்பிற்கான ஒரே அடித்தளமாக இயேசு கிறிஸ்துவினுடைய சிலுவை பலியை நோக்கி நமது விசுவாசத்தை நடத்துவதற்காகவே, வார்த்தை மற்றும் திருநியமங்கள் ஆகிய இரண்டும் நமக்கு நியமிக்கப்பட்டு ஏற்படுத்தப்பட்டிருக்கிறதா?**

**பதில்**. ஆம், நிச்சயமாக; ஏனென்றால் நம்முடைய இரட்சிப்பின் முழுமையும் கிறிஸ்து நமக்காக சிலுவையில் ஒப்புக்கொடுத்த அவரது ஒரே தியாகபலியைச் சார்ந்தே இருக்கிறது[1] என்று பரிசுத்த ஆவியானவர் சுவிசேஷத்தில் நமக்குப் போதித்து, திருநியமங்களின் மூலமாக நம்மை உறுதிப்படுத்துகிறார்.

[1] ரோமர் 6:3; கலா 3:27

**கேள்வி**: 68. **புதிய உடன்படிக்கையில் அல்லது ஏற்பாட்டில் கிறிஸ்து எத்தனை திருநியமங்களை ஏற்படுத்தியுள்ளார்?**

**பதில்**. பரிசுத்த ஞானஸ்நானம் மற்றும் பரிசுத்த இராப்போஜனம்[1] என்று இரண்டு திருநியமங்களை புதிய உடன்படிக்கையில் கிறிஸ்து ஏற்படுத்தியுள்ளார்.

[1] 1 கொரி 10:2-4

# பரிசுத்த ஞானஸ்நானம்

## கர்த்தருடைய நாள் 26

**கேள்வி**:69. **சிலுவையில் கிறிஸ்துவினுடைய ஒரே தியாகபலி உங்களுக்கு மெய்யான நன்மையை அளிக்கிறது என்பதை பரிசுத்த ஞானஸ்நானம் உங்களுக்கு எவ்வாறு அடையாளப்படுத்தி உறுதியளிக்கிறது**?

**பதில்**: தண்ணீரினால் இந்த வெளிப்பிரகாரமான சுத்திகரிப்பை கிறிஸ்து ஏற்படுத்தி,[1] தண்ணீரைக்கொண்டு வெளிப்புறமாக நான் கழுவப்படும்போது, என்னுடைய சரீரத்திலிருக்கிற அசுத்தத்திலிருந்து நான் பொதுவாக சுத்திகரிக்கப்படுவதைப்போல, என்னுடைய ஆத்துமாவின் சகல தூய்மைக்கேடாகிய பாவத்திலிருந்தும் கிறிஸ்துவினுடைய இரத்தத்தினாலும், ஆவியினாலும் நான் நிச்சயமாகவே சுத்திகரிக்கப்பட்டிருக்கிறேன்[2] என்ற வாக்குத்தத்தையும் அதனோடு சேர்த்திருக்கிறார்[3] என்று ஞானஸ்நானம் எனக்கு அடையாளப்படுத்தி உறுதியளிக்கிறது.

[1] மத் 28:19; அப்: 2:38

[2] மாற்கு 1:4; லூக் 3:3

[3] மாற்கு 16:16; மத் 3:11; ரோமர் 6:3

**கேள்வி**:70. **கிறிஸ்துவின் இரத்தத்தினாலும் ஆவியினாலும் கழுவப்படுவது என்றால் என்ன**?

**பதில்**: கிறிஸ்து நமக்காக சிலுவையில் செய்த தியாகபலியின் மூலம்[1] அவர் சிந்தின இரத்தத்தின் நிமித்தமாக, தேவன் நம் பாவத்தை மன்னித்து, பரிசுத்த ஆவியானவரின் மூலமாக நம்மை புதுப்பித்து, பாவத்திற்கு அதிகமதிகமாக மரிக்கச் செய்து, பரிசுத்தமான மற்றும் குற்றஞ்சாட்ட இயலாத வாழ்க்கையை வாழும்படிக்கு,[2] கிறிஸ்துவின் அங்கத்தவர்களாக நம்மை பரிசுத்தப்படுத்துவதே கிறிஸ்துவின் இரத்தத்தினாலும் ஆவியினாலும் கழுவப்படுவதாகும்.

[1] எபி 12:24; 1 பேது 1:2

[2] யோவான் 1:33; ரோமர் 6:4; கொலோ 2:11

**கேள்வி:71. ஞானஸ்நானத்தின் தண்ணீரைக்கொண்டு நாம் கழுவப்படும்போது, கிறிஸ்து தம்முடைய இரத்தத்தினாலும், ஆவியினாலும் நம்மை நிச்சயமாகக் கழுவுவார் என்று எங்கே வாக்குரைத்திருக்கிறார்?**

**பதில்**: "ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுங்கள்."[1] "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்"[2] என்று கூறப்பட்டுள்ள ஞானஸ்நானத்தின் நியமனத்தில் கிறிஸ்து அதை வாக்குப்பண்ணியிருக்கிறார். ஞானஸ்நானத்தை மறுஜென்ம முழுக்கு[3] மற்றும் பாவங்களைக் கழுவுதல்[4] என்று வேதாகமம் அழைக்கும் இடங்களிலும் இந்த வாக்குத்தத்தம் மீண்டும் உரைக்கப்பட்டுள்ளது.

[1] மத் 28:19

[2] மாற்கு 16:16

[3] தீத்து 3:5

[4] அப் 22:16

## கர்த்தருடைய நாள் 27

**கேள்வி**:72. **அப்படியென்றால், தண்ணீரைக்கொண்டு வெளிப்புறமாக எடுக்கும் ஞானஸ்நானம் தன்னிலே தானே பாவத்தைக் கழுவக்கூடியதாக இருக்கின்றதா**?

**பதில்**: நிச்சயமாக இல்லை; ஏனென்றால் இயேசு கிறிஸ்துவின் இரத்தமும், பரிசுத்த ஆவியானவரும் மட்டுமே எல்லாப் பாவங்களிலிருந்தும் நம்மை சுத்திகரிக்க முடியும்.[1]

[1] மத் 3:11; 1 பேது 3:21; 1 யோவான் 1:7; 1 கொரி 6:11

**கேள்வி**: 73. **அப்படியென்றால், ஞானஸ்நானத்தை "மறுஜென்ம முழுக்கு" மற்றும் "பாவங்களைக் கழுவுதல்" என்று ஏன் பரிசுத்த ஆவியானவர் அழைக்கிறார்?**

**பதில்**: தேவன் காரணமின்றி இவ்வாறு பேசவில்லை. அதாவது, உடலின் அசுத்தமானது தண்ணீரினால் அகற்றப்படுவதைப்போல, நம்முடைய பாவங்கள் இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினாலும் ஆவியினாலும் நீக்கப்படுகிறது[1] என்று போதிப்பதோடு மட்டுமல்லாமல், தண்ணீரினால் நாம் வெளிப்புறமாக கழுவப்படுவதைப்போல, நம்முடைய பாவங்களிலிருந்து நாம் ஆவிக்குரிய ரீதியில் சுத்திகரிக்கப்பட்டிருக்கிறோம்[2] என்று இந்த தெய்வீக வாக்குறுதியினாலும், அடையாளத்தினாலும் நமக்கு குறிப்பாக உறுதியளிக்கும்படிக்கே அவர் இவ்வாறு போதிக்கிறார்.

[1] வெளி 1:5; 1 கொரி 6:11

[2] மாற்கு 16:16; கலா 3:27

**கேள்வி:74. குழந்தைகளும் ஞானஸ்நானம் பெற வேண்டுமா?**

**பதில்**: ஆம்; ஏனென்றால், வயதுவந்தவர்களைப் போலவே அவர்களும் தேவனுடைய உடன்படிக்கையிலும்,[1] அவருடைய சபையிலும்[2] இணைக்கப்பட்டிருக்கின்றனர்; மேலும் கிறிஸ்துவின் இரத்தத்தினால் பாவத்திலிருந்து மீட்பும், விசுவாசத்தின் ஆக்கியோனாகிய பரிசுத்த ஆவியானவரும் வயதுவந்தவர்களைக் காட்டிலும் எவ்வளவும் குறைவாக குழந்தைகளுக்கு வாக்குப்பண்ணப்படவுமில்லை;[3] ஆகவே, பழைய உடன்படிக்கையில் அல்லது ஏற்பாட்டில் விருத்தசேதனத்தின்[4] மூலமாக செய்யப்பட்டதைப் போலவே, அதற்கு பதிலாக புதிய உடன்படிக்கையில், உடன்படிக்கையின் அடையாளமாக நிறுவப்பட்ட ஞானஸ்நானத்தின்[5] மூலம் குழந்தைகளும் கிறிஸ்தவ சபைக்குள்ளாகச் சேர்க்கப்பட்டு, அவிசுவாசிகளின் குழந்தைகளிடமிருந்து வேறுபடுத்தப்பட வேண்டும்.[6]

[1] ஆதி 17:7; அப் 2:39

[2] 1 கொரி 7:14; யோவேல் 2:16; மத் 19:14

[3] லூக் 1:14, 15; சங் 22:10; அப் 2:39

[4] ஆதி 17:14

[5] கொலோ 2:11-13

[6] அப் 10:47; 1 கொரி 12:13; 7:14

# நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் பரிசுத்த இராப்போஜனம்

### கர்த்தருடைய நாள் 28

**கேள்வி:75. கிறிஸ்து சிலுவையில் செய்துமுடித்த அவருடைய ஒரே தியாகபலியிலும், அவருடைய எல்லா நன்மைகளிலும் நீங்கள் பங்குதாரர்களாக இருக்கிறீர்கள் என்று கர்த்தருடைய பந்தி உங்களுக்கு எவ்விதம் அறிவுறுத்தி உறுதியளிக்கிறது**?

**பதில்**: கிறிஸ்துவின் நினைவுகூறுதலாக, இந்த பிட்கப்பட்ட அப்பத்தை உண்டு, இந்த பாத்திரத்திலிருந்து பானம்பண்ணும்படிக்கு எனக்கும், மற்ற எல்லா விசுவாசிகளுக்கும் கிறிஸ்து கட்டளையிட்டு, அதனோடு பின்வரும் வாக்குத்தத்தங்களையும் இணைத்திருக்கிறார்.

முதலாவதாக, எனக்காக பிட்கப்பட்ட ஆண்டவருடைய அப்பத்தையும், என்னோடு பகிர்ந்துகொள்ளப்பட்ட பாத்திரத்தையும் நான் நிச்சயமாய் என் கண்களினாலே காண்பதைப்போல, அவருடைய சரீரம் எனக்காக சிலுவையில் நிச்சயமாக ஒப்புக்கொடுக்கப்பட்டு பிட்கப்பட்டது, அவருடைய இரத்தம் எனக்காக சிந்தப்பட்டது.

இரண்டாவதாக, கர்த்தருடைய அப்பத்தையும், பாத்திரத்தையும் ஊழியக்காரருடைய கரங்களிலிருந்து பெற்று, அவற்றை கிறிஸ்துவினுடைய சரீரம் மற்றும் இரத்தத்திற்கான உறுதியான அடையாளங்களாக[1] நான் என்னுடைய வாயினால் நிச்சயமாய் சுவைப்பதைப்போல, சிலுவையில் அறையப்பட்ட தம்முடைய சரீரத்தோடும், சிந்தப்பட்ட தம்முடைய இரத்தத்தோடும் நித்திய ஜீவனுக்கென்று கிறிஸ்து என்னுடைய ஆத்துமாவை நிச்சயமாக போஷித்து வளர்க்கிறார் என்பதின் மூலமாக கிறிஸ்து சிலுவையில் செய்துமுடித்த அவருடைய ஒரே தியாகபலியிலும், அவருடைய எல்லா நன்மைகளிலும் நான் பங்குதாரராக இருக்கிறேன் என்று கர்த்தருடைய பந்தி எனக்கு அறிவுறுத்தி உறுதியளிக்கிறது.

[1] மத் 26:26-28; மாற்கு 14:22-24; லூக் 22:19,20; 1 கொரி 10:16,17; 11:23-25

**கேள்வி:76. அப்படியென்றால், சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவினுடைய சரீரத்தை உண்டு, அவருடைய சிந்தப்பட்ட இரத்தத்தை பானம்பண்ணுவது என்றால் என்ன?**

**பதில்**. பாவ மன்னிப்பையும், நித்திய ஜீவனையும் பெற்றுக்கொள்வதற்காக[1] மாத்திரம், கிறிஸ்துவினுடைய எல்லாப் பாடுகளையும், அவருடைய மரணத்தையும் ஒரு விசுவாசிக்கும் இருதயத்தோடு அணைத்துக்கொள்ளாமல், அதனோடு சேர்த்து, கிறிஸ்துவுக்குள்ளாகவும் நமக்குள்ளாகவும் வாசம்பண்ணுகிற பரிசுத்த ஆவியானவரின் மூலமாக கிறிஸ்துவின் பரிசுத்தமான சரீரத்தோடு அதிகமதிகமாய் நாம் இணைக்கப்படும்படியாகவும்,[2] கிறிஸ்துவினுடைய எல்லாப் பாடுகளையும், அவருடைய மரணத்தையும் ஒரு விசுவாசிக்கும் இருதயத்தோடு அணைத்துக்கொள்ளுவதே சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவினுடைய சரீரத்தை உண்டு, அவருடைய சிந்தப்பட்ட இரத்தத்தை பானம்பண்ணுவதாகும். இதினால், கிறிஸ்து பரலோகத்திலும், நாம் பூமியிலும் இருந்தாலும்,[3] நாம் அவருடைய மாம்சத்தின் மாம்சமாகவும், அவருடைய எலும்பின் எலும்பாகவும் இருக்கிறோம்;[4] மேலும் ஒரே சரீரத்தின் அவயவங்கள் அனைத்தும் ஒரே ஆத்துமாவினாலே இருப்பதைப்போல, நாம் ஒரே ஆவியினாலே வாழ்ந்து, என்றென்றைக்கும் ஆளுகைசெய்யப்படுகிறோம்.[5]

[1] யோவான் 6:35, 40, 47-48, 50-51, 53-54

[2] யோவான் 6:55, 56

[3] அப் 3:21; 1:9-11; 1 கொரி 11:26

[4] எபே 5:29-32; 1 கொரி 6:15, 17, 19; 1 யோவான் 3:24

[5] யோவான் 6:56-58; எபே 4:15, 16

**கேள்வி:77. இந்த பிட்கப்பட்ட அப்பத்திலிருந்து விசுவாசிகள் புசித்து, இந்த பாத்திரத்திலிருந்து அவர்கள் பானம்பண்ணும்போது, தம்முடைய சரீரத்தினாலும் இரத்தத்தினாலும் விசுவாசிகளை நிச்சயமாக போஷித்து வளர்ப்பதாக கிறிஸ்து எங்கே வாக்குப்பண்ணியிருக்கிறார்?**

**பதில்**: இராப்போஜனத்தின் நியமனத்தில் கிறிஸ்து அதை வாக்குப்பண்ணியிருக்கிறார். அது இவ்வாறு கூறுகிறது:[1] கர்த்தராகிய இயேசு தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, அதைப்பிட்டு: நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். போஜனம்பண்ணினபின்பு, அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்து: இந்தப் பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது;[2] நீங்கள் இதைப்

பானம்பண்ணும்போதெல்லாம் என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்.[3]

இந்த வாக்குத்தத்தமானது பரிசுத்த அப்போஸ்தலனாகிய பவுலின் மூலமாகவும் மீண்டும் உரைக்கப்பட்டிருக்கிறது. அவர் இவ்வாறு கூறுகிறார்: நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? அந்த ஒரே அப்பத்தில் நாமெல்லாரும் பங்குபெறுகிறபடியால், அநேகரான நாம் ஒரே அப்பமும் ஒரே சரீரமுமாயிருக்கிறோம்.[4]

[1] 1 கொரி 11:23; மத் 26:26; மாற்கு 14:22; லூக் 22:19

[2] யாத் 24:8; எபி 9:20

[3] யாத் 13:9; 1 கொரி 11:26

[4] 1 கொரி 10:16, 17

## கர்த்தருடைய நாள் 29

**கேள்வி:78. அப்படியென்றால் அப்பமும், திராட்சை ரசமும் மெய்யாகவே கிறிஸ்துவினுடைய சரீரமாகவும், இரத்தமாகவும் மாறுகின்றதா?**

**பதில்:** நிச்சயமாக இல்லை; மாறாக ஞானஸ்நானத்தில் தண்ணீர் கிறிஸ்துவினுடைய இரத்தமாக மாறாமலும், பாவத்தைக் கழுவாமலும், அவைகளைக் குறித்து தேவனால் ஏற்படுத்தப்பட்ட அடையாளமாகவும், உறுதிப்படுத்துதலாகவும்[1] மட்டும் இருப்பதைப் போலவே, கர்த்தருடைய பந்தியில் அப்பமும், திருநியமத்தின் இயல்புகள் மற்றும் பண்புகளுக்கு ஏற்ப[2] அது கிறிஸ்துவினுடைய சரீரம் என்று அழைக்கப்பட்டாலும், [3] அது அவருடைய மெய்யான சரீரமாக மாறுவதில்லை.

[1] **1 கொரி** 10:1-4; **1 பேது** 3:21; **யோவான்** 6:35,62,63

[2] **ஆதி** 17:10,11,14; **யாத்** 12:26,27,43,48, **அப்** 7:8; **மத்** 26:26; **மாற்கு** 14:24

[3] **1 கொரி** 10:16,17; 11:20,21

**கேள்வி:79. அப்படியென்றால், அப்பத்தை தன்னுடைய சரீரமென்றும், பாத்திரத்தைத் தன்னுடைய இரத்தம் அல்லது அவருடைய இரத்தத்தினால் உண்டான புதிய உடன்படிக்கையென்று கிறிஸ்துவும், கிறிஸ்துவினுடைய சரீரம் மற்றும் இரத்தத்தின் ஐக்கியமென்று பவுலும் ஏன் அழைக்கின்றனர்?**

**பதில்:** காரணமில்லாமல் கிறிஸ்து இவ்வாறு அழைப்பதில்லை. அதாவது, அப்பமும், திராட்சை ரசமும் இந்த தற்காலிகமான வாழ்க்கையை ஆதரிப்பதைப்போலவே, சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவினுடைய சரீரமும், சிந்தப்பட்ட இரத்தமும் நித்திய ஜீவனுக்கென்று நம்முடைய ஆத்துமாவை போஷிக்கிற உண்மையான ஆகாரமும் பானமுமாக[1] இருக்கிறது.

மேலும், நம்முடைய சரீரங்களின் வாய்களினால் கிறிஸ்துவின் நினைவாக இந்த பரிசுத்த அடையாளங்களை நாம் பெற்றுக்கொள்ளும்போது, கண்களால் காணக்கூடிய இந்த அடையாளங்கள் மற்றும் வாக்குறுதிகளின் மூலம், அவருடைய மெய்யான சரீரத்திலும், இரத்தத்திலும் பரிசுத்த ஆவியானவருடைய செயல்பாட்டினால் நாம் உண்மையான பங்குதாரர்களாக இருக்கிறோம்.[2]

அதுமட்டுமில்லாமல், நம்முடைய பாவங்களுக்காக நாமே பாடுகளைப்பட்டு, தேவனுடைய கோபத்தை திருப்திசெய்தோம் என்பதைப் போல, கிறிஸ்துவினுடைய சகல பாடுகளும், கீழ்ப்படிதலும் மெய்யாகவே

நம்முடையவைகளாக இருக்கின்றன[3] என்று நம்மை உறுதிப்படுத்தும்படிக்கே கிறிஸ்து அப்பத்தை தன்னுடைய சரீரமென்றும், பாத்திரத்தைத் தன்னுடைய இரத்தம் அல்லது அவருடைய இரத்தத்தினால் உண்டான புதிய உடன்படிக்கையென்றும் அழைக்கிறார்.

[1] யோவான் 6:51, 55, 56

[2] 1 கொரி 10:16, 17; 11:26-28; எபே 5:30

[3] ரோமர் 5:9, 18, 19; 8:4

## கர்த்தருடைய நாள் 30

**கேள்வி:80. கர்த்தருடைய பந்திக்கும், போப்பாண்டவர் ஏற்படுத்தின(ரோமன் கத்தோலிக்க)திருப்பலிக்கும் இடையேயுள்ள வேறுபாடு என்ன?**

**பதில்**: கிறிஸ்துதாமே சிலுவையில் ஒரேதரம் செய்துமுடித்த அவருடைய ஒரே தியாகபலியின் மூலமாக எல்லாப் பாவங்களுக்குமான முழுமையான மன்னிப்பு நமக்கு உண்டு[1] என்றும்; தம்முடைய மனித தன்மையில் இப்போது உலகத்தில் இராமல், பரலோகத்தில் தம்முடைய பிதாவின் வலதுபாரிசத்தில் இருக்கக்கூடிய[2] கிறிஸ்துவிற்குள்ளாக பரிசுத்த ஆவியானவரின் மூலமாக நாம் சேர்க்கப்பட்டிருக்கிறோம்[3] என்றும்; அவர் அங்கேயிருக்கும்போது நம்மால் ஆராதிக்கப்படுகிறார்[4] என்றும் கர்த்தருடைய பந்தி சாட்சியிடுகிறது.

ஆனால் ரோமன் கத்தோலிக்க மத திருப்பலியோ,உயிரோடிருப்பவர்களுக்காகவும், மரித்தவர்களுக்காகவும் பாதிரியார் கிறிஸ்துவை தினந்தோறும் சிலுவையில் பலிசெலுத்தாவிடில், கிறிஸ்துவினுடைய பாடுகளின் மூலமாக அவர்கள் ஒருபோதும் பாவ மன்னிப்பைப் பெற்றுக்கொள்ளமுடியாது என்று கற்பிக்கிறது; மேலும் அப்பம் மற்றும் திராட்சை ரசத்தின் வடிவத்தில் கிறிஸ்து சரீரப்பிரகாரமாக பிரசன்னமாயிருக்கிறபடியினால், அவற்றில் அவரை நாம் ஆராதிக்கவேண்டும் என்றும் அது கற்பிக்கிறது. அடிப்படையில், திருப்பலி என்பது இயேசு கிறிஸ்துவினுடைய மெய்யான ஒரே பரிகாரபலியையும், அவருடைய பாடுகளையும் மறுதலிக்கிற ஒரு சபிக்கப்பட்ட விக்கிரகாராதனை[5] என்பதைத் தவிர வேறொன்றுமில்லை.

[1] எபி 7:27; 9:12, 26; மத் 26:28; லூக் 22:19, 20; 2 கொரி 5:21

[2] எபி 1:3; 8:1, 2

[3] 1 கொரி 6:17; 12:13

[4] யோவான் 4:21-23; கொலோ 3:1; பிலி 3:20; லூக் 24:52, 53; அப் 7:55

[5] ஏசா 1:11, 14; மத் 15:9; கொலோ 2:22, 23; எரே 2:13

**கேள்வி:81. யாருக்காக கர்த்தருடைய பந்தி ஏற்படுத்தப்பட்டது?**

**பதில்**. யாரெல்லாம் தங்களுடைய பாவங்களுக்காக உண்மையிலேயே மனம்வருந்தி,[1] அதேநேரத்தில் கிறிஸ்துவினிமித்தம் அவைகளனைத்தும் அவர்களுக்கு மன்னிக்கப்பட்டுவிட்டது என்றும், அவர்களுக்குள்ளாக எஞ்சியிருக்கிற பாவ சுபாவமானது கிறிஸ்துவினுடைய பாடுகள் மற்றும் மரணத்தின் மூலமாக மூடப்பட்டுவிட்டது[2] என்றும் விசுவாசிக்கிறவர்களுக்கும், தங்களுடைய விசுவாசம் இன்னும் அதிகமாக பலப்படவேண்டும் என்றும்,

தங்களுடைய வாழ்வானது இன்னும் அதிகமாக பரிசுத்தமாய் இருக்கவேண்டும்[4] என்று மனதார விரும்புகின்றவர்களுக்கு கர்த்தருடைய பந்தி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஆனால் உண்மையான இருதயத்தோடு தேவனிடத்தில் திரும்பாமல் மாய்மாலக்காரர்களாக[3] வாழுகிறவர்கள், இந்த அப்பத்தை உண்டு, திராட்சை ரசத்தை குடிப்பவர்கள் தங்களுக்குத் தாங்களே நியாயத்தீர்த்துக் கொள்கிறார்கள்.

[1] **மத்** 5:3, 6; **லூக்** 7:37, 38; 15:18, 19

[2] **சங்** 103:3;

[3] **1 கொரி** 10:20-23; 11:28; **தீத்து** 1:16; **சங்** 50:15, 16

[4] **சங்** 116:12-14; **1 பேது** 2:11, 12

**கேள்வி:82. தங்களுடைய அறிக்கை மற்றும் வாழ்க்கையின் மூலமாக, தங்களை அவிசுவாசிகளாகவும், தேவனற்றவர்களாகவும் அறிவிக்கிறவர்களும்கூட இந்த கர்த்தருடைய பந்தியில் அனுமதிக்கப்பட வேண்டுமா?**

**பதில்.** இல்லை; ஏனென்றால் அப்படிச் செய்வதின் மூலமாக தேவனுடைய உடன்படிக்கை நிந்திக்கப்பட்டு, கர்த்தருடைய கோபம் முழு சபைக்கு எதிராகவும் மூண்டுகொள்ளும்.[1] ஆகவே கிறிஸ்துவினாலும், அவருடைய அப்போஸ்தலர்களினாலும் நியமிக்கப்பட்டதின்படி, பரலோகராஜ்யத்தின் திறவுகோலைக் கொண்டு அத்தகைய மனிதர்களை, அவர்கள் மனந்திரும்பி தங்கள் வாழ்க்கையை சீர்ப்படுத்தும் வரைக்கும் விலக்கிவைப்பது[2] கிறிஸ்தவ சபையின் கடமையாகும்.

[1] **1 கொரி** 10:21; 11:30,31; **ஏசா** 1:11,13; **எரே** 7:21; **சங்** 50:16, 22

[2] **மத்** 18:17,18

## கர்த்தருடைய நாள் 31

**கேள்வி:83. பரலோக ராஜ்யத்தின் திறவுகோல்கள் யாவை?**[1]

**பதில்**: பரிசுத்த சுவிசேஷத்தினுடைய பிரசங்கம், மற்றும் சபை ஒழுங்கு நடவடிக்கை[2] அல்லது கிறிஸ்தவ சபையைவிட்டு வெளியேற்றுதல்[3] ஆகிய இரண்டின் மூலமாகவும், விசுவாசிகளுக்கு பரலோக ராஜ்யம் திறக்கப்படுகிறது, அவிசுவாசிகளுக்கு எதிராக அது மூடப்படுகிறது.

[1] மத் 16:19

[2] யோவான் 20:13

[3] மத் 18:15-18

**கேள்வி:84. பரிசுத்த சுவிசேஷத்தினுடைய பிரசங்கத்தால் பரலோக ராஜ்யம் எவ்வாறு திறக்கப்படுகிறது அல்லது மூடப்படுகிறது?**

**பதில்**: மெய்யான விசுவாசத்தின் மூலமாக[1] சுவிசேஷத்தின் வாக்குத்தத்தத்தை ஒவ்வொரு விசுவாசிகளும் பெற்றுக்கொள்ளும்போது, கிறிஸ்துவினுடைய நன்மைகளினிமித்தம் அவர்களுடைய எல்லாப் பாவங்களும் உண்மையாகவே தேவனால் மன்னிக்கப்படுகிறது என்ற கிறிஸ்துவினுடைய கட்டளையின் அடிப்படையில்[2] சுவிசேஷம் சகல விசுவாசிகளுக்கும் அறிவிக்கப்பட்டு, வெளிப்படையாக சாட்சியளிக்கப்படும்போது பரலோக ராஜ்யம் திறக்கப்படுகிறது. அதற்கு மாறாக, அவிசுவாசிகளும், மெய்யாகவே மனந்திரும்பாதவர்களும், அவர்கள் மனந்திரும்பாதவர்களாய் வாழும் வரைக்கும், தேவனுடைய கோபத்திற்கும், நித்திய ஆக்கினைக்கும் ஆளாகின்றனர்[3] என்று எல்லா அவிசுவாசிகளுக்கும் அறிவிக்கப்பட்டு, சாட்சியளிக்கப்படும்போது பரலோக ராஜ்யம் அவர்களுக்கு எதிராக மூடப்படுகிறது. இந்த சுவிசேஷத்தின் சாட்சியத்தின் அடிப்படையில் தேவன் அவர்களை இம்மையிலும், மறுமையிலும் நியாயந்தீர்ப்பார்.

[1] யோவான் 3:18,36; மாற்கு 16:16

[2] மத் 28:19

[3] 2 தெச 1:7-9; யோவான் 20:21-23; மத் 16:19; ரோமர் 2:2, 13-17

**கேள்வி:85. கிறிஸ்தவ ஒழுங்கு நடவடிக்கைகளின் மூலமாக பரலோகராஜ்யம் எவ்வாறு மூடப்படுகிறது அல்லது திறக்கப்படுகிறது?**

**பதில்**: கிறிஸ்தவர்கள் என்ற பெயரை வைத்துக்கொண்டு, அதற்கு முரணான கொள்கைகளையும், நடைமுறைகளையும் கடைபிடித்து,[1] சகோதர அன்புடன் பலமுறை எச்சரிக்கப்பட்டதிற்கு பிறகும், தங்களுடைய பிழைகளையும், துன்மார்க்கமான வாழ்க்கைப்போக்கையும் விட்டுத் திரும்பாதவர்கள் கிறிஸ்துவினுடைய கட்டளையின்படி,[2] திருச்சபையிடமோ[3] அல்லது அதற்கென்று திருச்சபையால் நியமிக்கப்பட்டவர்களிடமோ[4] புகாரளிக்கப்படுவார்கள்.

அவர்களுடைய கண்டிப்பையும் அவர்கள் அற்பமாக எண்ணினால், திருநியமங்களின் பயன்பாடுகளிலிருந்து அவர்கள் தடைசெய்யப்பட்டு,[5] கிறிஸ்தவ சபையிலிருந்து வெளியேற்றப்படும்போது பரலோகராஜ்யம் மூடப்படுகிறது. மேலும் கிறிஸ்துவின் ராஜ்யத்திலிருந்து தேவனே அவர்களை வெளியேற்றுவார். மெய்யான மனந்திரும்புதலைக்காட்டி அவர்கள் உறுதியளிக்கும்போது, கிறிஸ்துவினுடைய அங்கத்தவர்களாகவும், அவருடைய சபையின் அங்கத்தவர்களாகவும் அவர்கள் மீண்டும் ஏற்றுக்கொள்ளப்பட்டு, பரலோகராஜ்யம் திறக்கப்படுகிறது.[6]

[1] 1 கொரி 5:11-12

[2] மத் 18:15

[3] மத் 18:15-18

[4] ரோமர் 12:7-9; 1 கொரி 12:28; 1 தீமோ 5:17; 2 தெச 3:14

[5] மத் 18:17; 1 கொரி 5:3-5

[6] 2 கொரி 2:6-8, 10, 11; லூக் 15:18

## மூன்றாவது பகுதி – நன்றியுணர்வு

### கர்த்தருடைய நாள் 32

**கேள்வி:86. நம்முடைய நிர்பந்தத்திலிருந்து, நமது எந்தவொரு தகுதியினிமித்தமுமாக இல்லாமல், கிறிஸ்துவின் மூலமாக கிருபையினால் மட்டுமே, நாம் விடுவிக்கப்பட்டிருக்கும்போது, நாம் இன்னும் ஏன் நற்கிரியைகளைச் செய்யவேண்டும்?**

**பதில்**: கிறிஸ்து தம்முடைய இரத்தத்தினால் நம்மை மீட்டு விடுவித்து, அவருடைய பரிசுத்த ஆவியானவரின் மூலமாக நம்மை அவருடைய சொந்த சாயலுக்கு ஒப்பாக புதிப்பித்தும் கொண்டிருக்கிறார். ஆகவே நம்முடைய முழு நடத்தையினால் தேவனுடைய ஆசீர்வாதங்களுக்காக நாம் அவருக்கு நன்றியைத் தெரிவிக்கிறோம்[1] என்று சாட்சியளிக்கும்படிக்கும், அவர் நம்மால் துதிக்கப்படும்படிக்கும்[2] நாம் நற்கிரியைகளைச் செய்யவேண்டும். மேலும் ஒவ்வொருவரும் தங்களுடைய விசுவாசத்தை அதன் கனிகளால் தங்களில் உறுதிப்படுத்திக் கொள்ளும்படிக்கும்,[3] நம்முடைய தேவபக்தியுள்ள உரையாடலின் மூலமாக மற்றவர்களை கிறிஸ்துவுக்கென்று ஆதாயப்படுத்தும்படிக்கும்[4] நாம் நற்கிரியைகளைச் செய்யவேண்டும்.

[1] **1 கொரி** 6:19,20; **ரோமர்** 6:13; 12:1,2; **1 பேது** 2:5, 9, 10

[2] **மத்** 5:16; **1 பேது** 2:12

[3] **2 பேது** 1:10; **கலா** 5:6, 24

[4] **1 பேது** 3:1-2; **மத்** 5:16; **ரோமர்** 14:19

**கேள்வி:87. அப்படியென்றால், தேவனிடத்தில் திரும்பாமல், தங்களுடைய துன்மார்க்கத்திலும், நன்றியுணர்வற்ற வாழ்க்கையிலும் தொடர்ந்து வாழுபவர்கள் இரட்சிக்கப்பட முடியாதா?**

**பதில்**: ஒருபோதும் முடியாது; ஏனென்றால் வேசிமார்க்கத்தாரும், விக்கிரகாராதனைக்காரரும், விபசாரக்காரரும், சுயபுணர்ச்சிக்காரரும், ஆண்புணர்ச்சிக்காரரும், திருடரும், பொருளாசைக்காரரும், வெறியரும், உதாசினரும், கொள்ளைக்காரரும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை என்று பரிசுத்த வேதாகமம் பறைசாற்றுகிறது.[1]

[1] **1 கொரி** 6:9,10; **எபே** 5:5,6; **1 யோவான்** 3:14,15; **கலா** 5:21

## கர்த்தருடைய நாள் 33

**கேள்வி:88. மனிதனுடைய உண்மையான மனமாற்றம் எத்தனை பகுதிகளை உள்ளடக்கியது?**

**பதில்:** மனிதனுடைய உண்மையான மனமாற்றம் இரண்டு பகுதிகளை உள்ளடக்கியது: முதலாவதாக, பழைய மனிதனை களைந்துபோடுதல்; இரண்டாவதாக, புதிய மனிதனை தரித்துக்கொள்ளுதல்.[1]

[1] ரோமர் 6:4-6; எபே 4:22, 23; கொலோ 3:5; 1 கொரி 5:7

**கேள்வி:89. பழைய மனிதனை களைந்துபோடுதல் என்றால் என்ன?**

**பதில்:** நம்முடைய பாவங்களின் மூலமாக நாம் தேவனை கோபப்படுத்தியிருக்கிறோம் என்பதைக் குறித்த இருதயத்தின் மெய்யான துக்கமும், அந்த பாவங்களை அதிகமதிகமாக வெறுத்து, அவைகளிடமிருந்து விலகி ஓடுவதுமே[1] பழைய மனிதனை களைந்துபோடுதலாகும்.

[1] சங் 51:3,8,17; லூக் 15:18; ரோமர் 8:13; யோவேல் 1:12,13

**கேள்வி:90. புதிய மனிதனை தரித்துக்கொள்ளுதல் என்றால் என்ன?**

**பதில்:** கிறிஸ்துவின் மூலமாக[1] தேவனுக்குள்ளான இருதயத்தின் மெய்யான ஒரு மகிழ்ச்சியும், எல்லா நற்கிரியைகளின் மூலமாகவும் தேவனுடைய சித்தத்தின்படி அன்போடும், மகிழ்ச்சியோடும் வாழ்வதுமே[2] புதிய மனிதனை தரித்துக்கொள்ளுவதாகும்.

[1] ரோமர் 5:1,2; 14:17; ஏசா 57:15

**கேள்வி:91. நற்கிரியைகள் யாவை?**

**பதில்:** நம்முடைய கற்பனைகளினாலோ அல்லது மனிதனுடைய முயற்சிகளினாலோ இல்லாமல்,[1] உண்மையான விசுவாசத்திலிருந்து உண்டாகி,[2] தேவனுடைய நியாயப்பிரமாணத்தின் அடிப்படையில்,[3] அவருடைய மகிமைக்காக[4] செய்யப்படுவதே நற்கிரியைகளாகும்.

[1] உபா 12:32; எசே 20:18; மத் 15:9

[2] ரோமர் 14:23

[3] 1 சாமு 15:22; எபே 2:2,10

[4] 1 கொரி 10:31

## கர்த்தருடைய நாள் 34

**கேள்வி:92. தேவனுடைய நியாயப்பிரமாணம் என்பது என்ன?**

**பதில்**: யாத்திராகமம் 20, உபாகமம் 5- ல் தேவன் இந்த வார்த்தைகளையெல்லாம் பேசினார்:

உன்னை அடிமைத்தன வீடாகிய எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணின உன் தேவனாகிய கர்த்தர் நானே.

1. என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்கவேண்டாம்.

2. மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின்கீழ்த் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம்; நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம்; உன் தேவனாகிய கர்த்தராயிருக்கிற நான் எரிச்சலுள்ள தேவனாயிருந்து, என்னைப் பகைக்கிறவர்களைக் குறித்துப் பிதாக்களுடைய அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்தில் மூன்றாம் நான்காம் தலைமுறைமட்டும் விசாரிக்கிறவராயிருக்கிறேன். என்னிடத்தில் அன்புகூர்ந்து, என் கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கோ ஆயிரம் தலைமுறைமட்டும் இரக்கஞ் செய்கிறவராயிருக்கிறேன்.

3. உன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக; கர்த்தர் தம்முடைய நாமத்தை வீணிலே வழங்குகிறவனைத் தண்டியாமல் விடார்.

4. ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக; ஆறுநாளும் நீ வேலைசெய்து, உன் கிரியைகளையெல்லாம் நடப்பிப்பாயாக; ஏழாம்நாளோ உன் தேவனாகிய கர்த்தருடைய ஓய்வுநாள்; அதிலே நீயானாலும், உன் குமாரனானாலும், உன் குமாரத்தியானாலும், உன் வேலைக்காரனானாலும், உன் வேலைக்காரியானாலும், உன் மிருகஜீவனானாலும், உன் வாசல்களில் இருக்கிற அந்நியனானாலும், யாதொரு வேலையும் செய்யவேண்டாம். கர்த்தர் ஆறுநாளைக்குள்ளே வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கி, ஏழாம்நாளிலே ஓய்ந்திருந்தார்; ஆகையால், கர்த்தர் ஓய்வுநாளை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தமாக்கினார்.

5. உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கிற தேசத்திலே உன் நாட்கள் நீடித்திருப்பதற்கு, உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக.

6. கொலை செய்யாதிருப்பாயாக.

7. விபசாரம் செய்யாதிருப்பாயாக.

8. களவு செய்யாதிருப்பாயாக.

9. பிறனுக்கு விரோதமாகப் பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக.

10. பிறனுடைய வீட்டை இச்சியாதிருப்பாயாக; பிறனுடைய மனைவியையும், அவனுடைய வேலைக்காரனையும், அவனுடைய வேலைக்காரியையும், அவனுடைய எருதையும், அவனுடைய கழுதையையும், பின்னும் பிறனுக்குள்ள யாதொன்றையும் இச்சியாதிருப்பாயாக.

**கேள்வி:93. இந்தக் கட்டளைகள் எவ்வாறு பிரிக்கப்பட்டுள்ளது?**

**பதில்**: இந்தக் கட்டளைகள் இரண்டு அட்டவணைகளாக பிரிக்கப்பட்டுள்ளது.[1] நாம் தேவனிடம் எவ்வாறு நடந்துகொள்ளவேண்டும் என்பதைக் குறித்து முதலாவது அட்டவணை நமக்குக் கற்பிக்கிறது. நம்முடைய அயலகத்தாருக்கு நாம் ஆற்றவேண்டிய கடமைகள் என்ன என்பதைக் குறித்து இரண்டாவது அட்டவணை கற்பிக்கிறது.[2]

[1] யாத் 34:28,29

[2] உபா 4:13; 10:3,4

**கேள்வி:94. முதலாவது கட்டளையில் தேவன் என்ன கட்டளையிடுகிறார்?**

**பதில்**: நான், என்னுடைய சொந்த ஆத்துமாவின் இரட்சிப்பை மெய்யாகவே விரும்புகிறதைப்போல, எல்லா விக்கிரகாராதனை,[1] பில்லிசூனியம், குறிசொல்லுதல், மூடநம்பிக்கை,[2] பரிசுத்தவான்கள் அல்லது மற்ற எந்தப் படைப்புகளின் வழிபாடு[3] ஆகியவற்றைத் தவிர்த்து, அவைகளிலிருந்து விலகி ஓடவேண்டும்.

மேலும், உண்மையான ஒரே தேவனை சரியாக அறிந்துகொள்ள கற்றுக்கொண்டு,[4] அவரை மட்டுமே நம்பி,[5] தாழ்மையுடனும், பொறுமையுடனும்[6] அவருக்குக் கீழ்ப்படிந்து,[7] அவரிடத்திலிருந்து மட்டுமே சகல நன்மையான காரியங்களையும் எதிர்பார்த்து,[8] என்னுடைய முழு இருதயத்தோடு அவரை அன்புசெய்து,[9] அவருக்குப் பயந்து,[10] அவரை மகிமைப்படுத்தவேண்டும்[11] என்று முதலாவது

கட்டளையில் தேவன் கட்டளையிடுகிறார். அதினால், தேவனுடைய சித்தத்திற்கு விரோதமாக ஒரு சிறிய காரியத்தைக்கூட செய்வதற்குப் பதிலாக,[12] நான் எல்லா படைப்புகளையும் துறந்து, அவைகளை உதறித்தள்ளுவேன்.[13]

[1] 1 கொரி 6:9,10; 10:7,14

[2] லேவி 18:21; உபா 18:10-12

[3] மத் 4:10; வெளி 19:10

[4] யோவான் 17:3

[5] எரே 17:5, 7

[6] எபி 10:36; கொலோ 1:11; ரோமர் 5:3, 4; பிலி 2:14

[7] 1 பேது 5:5, 6

[8] சங் 104:27; ஏசா 45:7; யாக் 1:17

[9] உபா 6:5; மத் 22:37

[10] உபா 6:5; மத் 10:28;

[11] மத் 4:10

[12] மத் 5:19

[13] மத் 5:29,30; அப் 5:29; மத் 10:37

**கேள்வி:95. விக்கிரகாராதனை என்றால் என்ன?**

**பதில்**: தம்முடைய வார்த்தையில் தன்னை வெளிப்படுத்தியிருக்கிற மெய்யான ஒரே தேவனுக்குப் பதிலாக, அல்லது அவரைத்தவிர, மனிதன் தன்னுடைய நம்பிக்கையை வைக்கும்படிக்கு[1] வேறு எந்தவொரு பொருளையும் உருவாக்குவதோ, அல்லது வைத்திருப்பதோ விக்கிரகாராதனை ஆகும்.

[1] 2 நாளா 16:12; பிலி 3:18,19; கலா 4:8; எபே 2:12

## கர்த்தருடைய நாள் 35

**கேள்வி:96. இரண்டாவது கட்டளையில் தேவன் எதை எதிர்பார்க்கிறார்?**

**பதில்:** நாம் எந்தவொரு வகையிலும் தேவனை சொரூபங்களால் பிரதிநிதித்துவப்படுத்தக் கூடாது,[1] மேலும் அவர் தம்முடைய வார்த்தையில் கட்டளையிட்டிருப்பதைக்காட்டிலும், வேறு எந்த வழியிலும் அவரை ஆராதிக்கவும் கூடாது[2] என்று இரண்டாவது கட்டளையில் தேவன் எதிர்பார்க்கிறார்.

[1] உபா 4:15; ஏசா 40:18; ரோமர் 1:23; அப் 17:29

[2] 1 சாமு 15:23; உபா 12:30

**கேள்வி:97. அப்படியென்றால், சொரூபங்களை ஒருபோதும் உண்டாக்கக்கூடாதா?**

**பதில்:** தேவனை எந்தவொரு வகையிலும் சொரூபங்களால் பிரதிநிதித்துவப்படுத்த முடியாது.[1] ஆனால் படைப்புகளைப் பொறுத்தவரைக்கும், அவைகள் உருவங்களாலே சித்தரிக்கப்பட்டாலும், அவைகளை ஆராதிப்பதற்காகவோ அல்லது அவற்றின் மூலமாக தேவனுக்கு சேவைபுரிவதற்காகவோ அவைகளை உருவாக்குவதையும், அவைகளுக்கு ஒத்த வேறொன்றை வைத்திருப்பதையும் தேவன் தடைசெய்கிறார்.[2]

[1] உபா 4:15-19; ஏசா 46:5; ரோமர் 1:23

[2] யாத் 23:24; 34:13,14; எண் 33:52; உபா 7:5

**கேள்வி:98. சாதாரண விசுவாசிகளுக்கான புத்தகங்களாக சபைகளில் உருவப்படங்கள் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதா?**

**பதில்:** முடியாது; ஏனென்றால், நாம் தேவனைவிட பெரிய ஞானவான்கள் என்பதைப்போல பாசாங்கு செய்யக்கூடாது. அவர் தம்முடைய ஜனங்களை ஊமையான உருவப்படங்களினால் அல்ல,[1] மாறாக தம்முடைய வார்த்தையின் உயிர்த்துடிப்புடைய பிரசங்கத்தினால்[2] போதிப்பார்.

[1] எரே 10:1-15; ஆபகூக் 2:18, 19

[2] 2 தீமோ 3:16; 2 பேது 1:19

## கர்த்தருடைய நாள் 36

**கேள்வி:99. மூன்றாவது கட்டளையில் எதிர்பார்க்கப்பட்டுள்ளது என்ன?**

**பதில்**: சாபமிடுதல்[1] அல்லது பொய் சாட்சி கூறுதல் ஆகியவற்றினால் மட்டுமல்ல, கண்மூடித்தனமாக சத்தியம் செய்வதின்[2] மூலமாகவும் நாம் தேவனுடைய நாமத்தை இழிவுபடுத்தவோ அல்லது துஷ்பிரயோகம் செய்யவோ கூடாது; அமைதியாக இருப்பதினாலும் அல்லது கண்டும்காணாமலிருப்பதினாலும் மற்றவர்களுடைய இத்தகைய கொடூரமான பாவங்களில் நாம் பங்குதாரர்களாகவும் இருக்கக்கூடாது.

சுருக்கமாக, தேவன் நம்மூலமாக சரியாக அறிக்கையிடப்பட்டு ஆராதிக்கப்படும்படிக்கும்,[3] நம்முடைய எல்லா வார்த்தைகள் மற்றும் செயல்களிலும் மகிமைப்படும்படிக்கும்,[4] தேவனுடைய பரிசுத்தமான நாமத்தை நாம் பயத்தோடும், பக்தியோடும்[5] உபயோகிப்பதைத்தவிர வேறு எப்படியும் உபயோகிக்கக்கூடாது என்று மூன்றாவது கட்டளை எதிர்பார்க்கிறது.

[1] லேவி 24:11; 19:12; மத் 5:37; லேவி 5:4

[2] ஏசா 45:23, 24;

[3] 1 தீமோ 2:8

[4] 1 கொரி 3:16, 17

[5] மத் 10:32

**கேள்வி:100. அப்படியென்றால், சாபமிடுதலையும், சத்தியம் செய்வதையும் தடுப்பதற்கு தங்களால் முடிந்த அளவிற்கு முயற்சி செய்யாதவர்களுக்கு விரோதமாக தேவனுடைய கோபம் பற்றியெரியும் அளவிற்கு, சத்தியம் செய்வதின் மூலமாகவும், சாபமிடுவதின் மூலமாகவும் தேவனுடைய நாமத்தை இழிவுபடுத்துவது அவ்வளவு வெறுக்கத்தக்க ஒரு பாவமா?**

**பதில்**: சந்தேகத்துக்கிடமின்றி அது அவ்வளவு வெறுக்கத்தக்க ஒரு பாவம்தான். ஏனென்றால் தேவனுடைய நாமத்தை இழிவுபடுத்துவதைக் காட்டிலும், அவருடைய கோபத்தை பற்றியெரியச் செய்கிற வேறே பெரிய பாவம் எதுவுமில்லை.[1] ஆகவே இந்த பாவமானது மரணத்தினால் தண்டிக்கப்படவேண்டும்[2] என்று அவர் கட்டளையிட்டிருக்கிறார்.

[1] லேவி 5:1

[2] லேவி 24:15

## கர்த்தருடைய நாள் 37

**கேள்வி:101. அப்படியென்றால், மத ரீதியாக நாம் தேவனுடைய நாமத்தில் சத்தியம் செய்யலாமா?**

**பதில்:** ஆம், செய்யலாம்; விசாரிக்கப்படும் காரியங்களைக் குறித்து நீதிபதிகள் கேட்கும்போதும், தேவனுடைய மகிமைக்கான மெய்ப்பற்றையும், சத்தியத்தையும் உறுதிப்படுத்தவும், நம்முடைய அயலாருக்கான பாதுகாப்பை கருதியும் அவசியமான வேலைகளில்[1] தேவனுடைய நாமத்தினால் சத்தியம் செய்யலாம். ஏனென்றால் அத்தகைய சத்தியமானது தேவனுடைய வார்த்தையில் நிறுவப்பட்டிருக்கிறது,[2] ஆகவே பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் பரிசுத்தவான்களால் நியாயமானம் முறையில் அது பயன்படுத்தவும்பட்டது.[3]

[1] யாத் 22:11; நெகே 13:25

[2] உபா 6:13; எபி 6:16

[3] ஆதி 21:24; யோசு 9:15, 19; 1 சாமு 24:22; 2 கொரி 1:23; ரோமர் 1:9

**கேள்வி:102. புனிதர்கள் அல்லது வேறு எந்த உயிரினங்களின் மீதும் நாம் சத்தியம் செய்யலாமா?**

**பதில்:** இல்லை, செய்யக்கூடாது; அத்தகைய கனத்தைப் பெறுவதற்கு எந்த உயிரினமும் பாத்திரமுள்ளவை அல்ல.[1] ஏனென்றால் தேவனே இருதயத்தை அறிந்த ஒரே ஒருவராகவும், சத்தியத்திற்கு சாட்சிபகருகிறவராகவும் இருக்கிறார். என்றாலும் நான் பொய் சத்தியம் செய்தால் என்னை தண்டிப்பார்.[2] மேலும் நியாயமான முறையில் சத்தியம் பண்ணுவது தேவனை நோக்கிக் கூப்பிடுதலுக்கு சமானமாயிருக்கிறது.

[1] மத் 5:34,35

[2] 2 கொரி 1:23

## கர்த்தருடைய நாள் 38

**கேள்வி**:103. **நான்காவது கட்டளையில் தேவன் எதை எதிர்பார்க்கிறார்**?

**பதில்**: முதலாவதாக, சுவிசேஷ ஊழியமும், அதற்குரிய (ஞாயிறு) பள்ளிகளும் தொடரவேண்டுமென்றும்;[1] நான், குறிப்பாக ஓய்வுநாளிலே[2] தேவனுடைய வார்த்தையைக் கேட்கும்படிக்கும், திருநியமங்களைப் பயன்படுத்தும்படிக்கும், சபையாக தேவனை நோக்கிக் கூப்பிடவும்,[3] ஏழைகளுக்கு செய்யப்படும் உதவிகளில் என்னுடைய கிறிஸ்தவ பங்களிப்பை செலுத்தவும்[4] தேவனுடைய சபையில் ஊக்கத்தோடு கலந்துகொள்ளவேண்டும்.[5] இரண்டாவதாக, என் ஜீவனுள்ள நாளெல்லாம் நான் என்னுடைய தீமையான செயல்களை ஒதுக்கி வைத்துவிட்டு, நித்திய ஓய்வுநாளை[6] இந்த உலகத்து வாழ்க்கையில் துவங்கும்படிக்கு, எனக்குள்ளாக கர்த்தருடைய பரிசுத்த ஆவியானவர் கிரியையை நடப்பிக்கும்படி, கர்த்தருக்கு என்னை முழுவதுமாக அர்ப்பணிக்கவேண்டும் என்று நான்காவது கட்டளையில் தேவன் எதிர்பார்க்கிறார்.

[1] உபா 12:19; தீத்து 1:5; 1 தீமோ 3:14, 15; 1 கொரி 9:11; 2 தீமோ 2:2

[2] லேவி 23:3

[3] 1 தீமோ 2:1

[4] 1 கொரி 16:2

[5] அப் 2:42, 46; 1 கொரி 14:19,29,31; 11:33

[6] ஏசா 66:23

## கர்த்தருடைய நாள் 39

**கேள்வி:104. ஐந்தாவது கட்டளையில் தேவன் எதை எதிர்பார்க்கிறார்?**

**பதில்**: என்னுடைய தகப்பன், தாய் மற்றும் எனக்கு மேலான அதிகாரத்தில் இருக்கிற அனைவருக்கும் நான் கனத்தையும், அன்பையும், மெய்ப்பற்றையும் காட்டவேண்டுமென்றும், அவர்களுடைய கரத்தினால் நம்மை ஆளுவது தேவனுக்குப் பிரியமாயிருக்கிறபடியால்,[1] அவர்களுடைய நல் யோசனைகளுக்கும், சீர்திருத்துதல்களுக்கும் நான் கீழ்ப்படிந்து என்னைத் தாழ்த்தும்படிக்கும்,[2] அவர்களுடைய பெலவீனங்கள் மற்றும் குறைபாடுகளை பொறுமையோடு தாங்கிக்கொள்ளவும் வேண்டும்[3] என்று ஐந்தாவது கட்டளையில் தேவன் எதிர்பார்க்கிறார்.

[1] எபே 6:5, 6; கொலோ 3:19, 21; ரோமர் 13:1-8; மத் 22:21

[2] எபே 6:1-3; கொலோ 3:18, 20; எபே 5:22; ரோமர் 1:31

[3] நீதி 23:22

## கர்த்தருடைய நாள் 40

**கேள்வி: 105. ஆறாவது கட்டளையில் தேவன் எதை எதிர்பார்க்கிறார்?**

**பதில்**: எண்ணங்கள், வார்த்தைகள், முக பாவணைகள் மற்றும் நடத்தைகளின் மூலமாக என்னுடைய அயலகத்தாரை நான் அவமதித்து, நானோ அல்லது வேறு ஒருவரின் மூலமாகவோ அவர்களை வெறுக்கவோ, காயப்படுத்தவோ அல்லது கொலை செய்யவோக்கூடாது;[1] மாறாக பழிவாங்குவதற்கான எல்லா ஆசையையும் நான் ஒதுக்கிவைக்கவேண்டும்;[2] அதுமட்டுமல்லாது, நான் என்னைக் காயப்படுத்தவும் கூடாது, விருப்பத்தோடு எந்தவொரு ஆபத்திற்கும் நேராக என்னை உட்படுத்தவும் கூடாது[3] என்று ஆறாவது கட்டளையில் தேவன் எதிர்பார்க்கிறார். அதினால்தான் கொலையைத் தடுக்கும்படிக்கு நீதிபதிகள் பட்டயத்தை ஆயுதமாக ஏந்தியுள்ளனர்.[4]

[1] மத் 5:21,22; நீதி 12:18; மத் 26:52

[2] எபே 4:26; ரோமர் 12:19; மத் 5:39, 40

[3] மத் 4:5-7; கொலோ 2:23

[4] ஆதி 9:6; மத் 26:52; ரோமர் 13:4

**கேள்வி:106. ஆனால் இந்த கட்டளை வெறுமனே கொலை செய்வதைக் குறித்து மட்டுமே பேசுகிறதா?**

**பதில்**: இல்லை; கொலை செய்வதை தடைசெய்ததின் மூலமாக, பொறாமை, வெறுப்பு, கோபம் மற்றும் பழிவாங்கும் விருப்பம்[1] ஆகிய கொலை செய்வதற்கான காரணங்களையும் தேவன் வெறுக்கிறார்; மேலும் அவைகள் அனைத்தையும் கொலை என்றே அவர் கணக்கிடுகிறார்[2] என்பதை அவர் நமக்குக் கற்றுத்தருகிறார்.

[1] யாக் 1:20; கலா 5:20; ரோமர் 1:29

[2] 1 யோவான் 3:15;

**கேள்வி:107. ஆனால் மேலே குறிப்பிடப்பட்ட விதங்களில் நாம் எந்த மனிதனையும் கொலை செய்யாமல் இருந்தால் மட்டும் போதுமா?**

**பதில்**: இல்லை, போதாது; ஏனென்றால் பொறாமை, வெறுப்பு மற்றும் கோபத்தை தேவன் தடைசெய்யும்போது, நம்மைப்போல நம்முடைய அயலகத்தாரை நேசிக்கும்படிக்கும்,[1] அவர்களிடத்தில் பொறுமையையும், சமாதானத்தையும், பணிவையும், இரக்கத்தையும் மற்றும் எல்லா தயவையும் காட்டும்படிக்கும்,[2] நம்மால் இயன்ற அளவிற்கு அவர்களுடைய காயங்களைத் தடுக்கவும்,[3] நம்முடைய எதிரிகளுக்கும் நாம் நன்மைசெய்யவும்[4] அவர் நமக்குக் கட்டளையிடுகிறார்.

[1] மத் 22:39; 7:12

[2] ரோமர் 12:10; எபே 4:2; கலா 6:1-2; மத் 5:5; ரோமர் 12:18; யாத் 23:5

[3] மத் 5:45;

[4] ரோமர் 12:20

## கர்த்தருடைய நாள் 41

**கேள்வி:108. ஏழாவது கட்டளை நமக்கு எதைக் கற்பிக்கிறது?**

**பதில்**: எல்லா அசுத்தங்களும் தேவனால் சபிக்கப்பட்டவைகளாக இருக்கிறபடியினால்,[1] அவைகள் அனைத்தையும் நாமும் கண்டிப்பாக நம்முடைய முழு இருதயத்தோடு வெறுத்து,[2] பரிசுத்த திருமண வாழ்வாக இருந்தாலும் சரி, அல்லது தனி வாழ்வாக இருந்தாலும் சரி,[3] நாம் கற்புடமை உள்ளவர்களாகவும், கண்ணியமானவர்களாகவும் வாழவேண்டும்[4] என்று ஏழாவது கட்டளை நமக்கு கற்பிக்கிறது.

[1] லேவி 18:27

[2] உபா 29:20-23

[3] எபி 13:4; 1 கொரி 7:4-9

[4] 1 தெச 4:3, 4

**கேள்வி:109. இந்த கட்டளையில் விபச்சாரம் மற்றும் இகழ்ச்சிக்குரிய பாவங்கள் போன்றவற்றை மட்டுமே தேவன் தடைசெய்கிறாரா?**

**பதில்**: நம்முடைய சரீரமும் ஆத்துமாவும் பரிசுத்த ஆவியானவருடைய ஆலயமாக இருக்கிறபடியால், அவற்றைத் தூய்மையாகவும், பரிசுத்தமாகவும் பாதுகாக்கவேண்டும் என்று அவர் நமக்குக் கட்டளையிடுகிறார்; ஆகவே அனைத்து முறைதவறிய செயல்பாடுகளையும்,[1] முக பாவணைகளையும், வார்த்தைகளையும், எண்ணங்களையும், விருப்பங்களையும்,[2] மேலும் அவைகள் அனைத்தையும் நோக்கி மனிதனை கவர்ந்திழுக்கக்கூடிய எதனையும்[3] அவர் தடைசெய்கிறார்.

[1] எபே 5:3; 1 கொரி 6:18;

[2] மத் 5:28

[3] எபே 5:18; 1 கொரி 15:33

## கர்த்தருடைய நாள் 42

**கேள்வி:110. எட்டாவது கட்டளையில் தேவன் எதை தடைசெய்கிறார்?**

**பதில்**: நீதிபதிகளால் தண்டிக்கப்படவேண்டிய களவுகள்[1] மற்றும் கொள்ளைகள்[2] ஆகியவற்றை தேவன் தடைசெய்வதோடு மட்டுமில்லாமல், நம்முடைய அயலகத்தாருக்கு சொந்தமான உடமைகளை நமக்குரியதாக அபகரித்துக்கொள்ளுவதற்கு[3] நாம் வடிவமைக்கின்ற எல்லா பொல்லாத தந்திரங்களையும், சாதனங்களையும், அது மற்றவர்களைக் கட்டாயப்படுத்தியோ அல்லது பார்ப்பதற்கு சரியாகத் தோன்றினாலும் உண்மையில் நியாயமற்றதாக இருக்கக்கூடிய எடை,[4] அளவு, மதிப்பீடு,[5] மோசடி பொருட்கள், போலிக் காசுகள், கந்து வட்டி[6] அல்லது தேவனால் தடைசெய்யப்பட்ட வேறு எந்தவொரு வழியையும் திருட்டு என்ற பெயரின்கீழ் சேர்த்தும் வைத்திருக்கிறார். அதிலே எல்லா பொருளாசைகளும்,[7] தேவனுடைய ஈவுகளை தவறாக பயன்படுத்தி, வீணடிப்பதும் அடங்கும்.

[1] **1 கொரி** 6:10

[2] **1 கொரி** 5:10

[3] **லூக்** 3:14; **1 தெச** 4:6

[4] **நீதி** 11:1

[5] **எசே** 45:9-11; **உபா** 25:13

[6] **சங்** 15:5; **லூக்** 6:35

[7] **1 கொரி** 6:10

**கேள்வி:111. ஆனால் தேவன் இந்த கட்டளையில் எதை எதிர்பார்க்கிறார்?**

**பதில்**: ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் என்னுடைய அயலகத்தாருடைய நன்மைகளை என்னால் முடிந்த அளவிற்கு நான் ஊக்குவிக்கும்படியாகவும், மற்றவர்கள் என்னை எப்படி நடத்தவேண்டும் என்று நான் விரும்புகிறேனோ, அதேபோல என் அயலகத்தாரை நான் நடத்தவேண்டுமென்றும்,[1] வறுமையில் இருப்பவர்களுக்கு உதவும்படிக்கு நான் உண்மையாய் உழைக்கவேண்டுமென்றும்[2] தேவன் இந்த கட்டளையில் எதிர்பார்க்கிறார்.

[1] **மத்** 7:12

[2] **நீதி** 5:16; **எபே** 4:28

## கர்த்தருடைய நாள் 43

**கேள்வி**:112. **ஒன்பதாவது கட்டளை எதிர்பார்ப்பது என்ன**?

**பதில்**: எந்தவொரு மனிதனுக்கும் எதிராகவும் நான் பொய்சாட்சி சொல்லாமலும்,[1] எந்தவொரு மனிதனுடைய வார்த்தைகளையும் பொய்யாக்காமலும்[2] இருந்து, புறங்கூறுபவனாகவும், அவதூறு பரப்புகிறவனாகவும் இல்லாமல்,[3] எந்த மனிதனையும் நியாயந்தீர்க்காமலும் அல்லது காரியத்தை சரியாக ஆராயாமலும், விசாரியாமலும் கண்மூடித்தனமாக நியாயந்தீர்க்கிறவர்களோடு கைகோராமல் இருந்து,[4] சாத்தானின், அவனுக்கேயுரிய வேலைகளாகிய எல்லா விதமான பொய்கள் மற்றும் வஞ்சகத்தைத் தவிர்க்காவிட்டால் தேவனுடைய உக்கிர கோபத்தை நானே என்மேல் கொண்டுவருவேன்[5] என்றறிந்து, அவை அனைத்தையும் தவிர்த்து,[6] அதேபோல் தீர்ப்பின் காரியங்களிலும் மற்ற எல்லா நடவடிக்கைகளிலும் சத்தியத்தை நேசித்து, அதை நேர்மையாக பேசி, அதனை அறிக்கை செய்யவேண்டும்.[7] மேலும் என்னுடைய அயலகத்தாருடைய மரியாதையையும், நற்பண்பையும் என்னால் முடிந்தவரைக்கும் பாதுகாத்து ஊக்குவிக்கவேண்டும்[8] என்று ஒன்பதாவது கட்டளை எதிர்பார்க்கிறது.

[1] நீதி 19:5, 9; 21:28

[2] சங் 15:3

[3] ரோமர் 1:29, 30

[4] மத் 7:1-5; லூக் 6:37

[5] நீதி 12:22; 13:5

[6] லேவி 19:11

[7] 1 கொரி 13:6; எபே 4:25

[8] 1 பேது 4:8

## கர்த்தருடைய நாள் 44

**கேள்வி:113. பத்தாவது கட்டளை நம்மிடத்தில் எதிர்பார்ப்பது என்ன?**
**பதில்:** தேவனுடைய எந்தவொரு கட்டளைக்கும் முரணான மிகச்சிறிய விருப்பம் அல்லது சிந்தனைகூட நமது இருதயங்களில் ஒருபோதும் எழும்பக்கூடாது; மாறாக எல்லா நேரத்திலும், எல்லாப் பாவங்களையும் நம்முடைய முழு இருதயத்தோடும் நாம் வெறுத்து, எல்லா நீதியிலும் மகிழ்ச்சியடைந்தவர்களாய் இருக்கவேண்டும்[1] என்று பத்தாவது கட்டளை நம்மிடத்தில் எதிர்பார்க்கிறது.

[1] ரோமர் 7:7-25

**கேள்வி:114. ஆனால் தேவனிடமாக மனமாற்றமடைந்தவர்கள் இந்த கட்டளைகளைப் பூரணமாக கடைபிடிக்க இயலுமா?**
**பதில்:** முடியாது; மகா பெரிய பரிசுத்தவான்களும்கூட, இந்த உலக வாழ்க்கையில், தேவன் எதிர்பார்க்கும் இந்த கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவதில் ஒரு சிறிய ஆரம்பத்தில் தான் இருக்கிறார்கள்.[1] இருந்தபோதும், சில கட்டளைகளின்படி மட்டுமல்ல, தேவனுடைய எல்லா கட்டளைகளின்படியும் ஒரு மனமுவந்த தீர்மானத்துடன் அவர்கள் வாழ ஆரம்பிக்கின்றனர்.[2]

[1] ரோமர் 7:14

[2] ரோமர் 7:15-22; யாக் 3:2

**கேள்வி:115. அப்படியென்றால், பத்துக்கட்டளைகளை எந்த மனிதனாலும் இந்த உலகத்தில் கடைபிடிக்க இயலாது எனும்போது, அதனை மிகவும் கண்டிப்பாக பிரசங்கிக்கவேண்டும் என்று தேவன் ஏன் விரும்புகிறார்?**
**பதில்:** முதலாவதாக, நம்முடைய வாழ்நாள் முழுவதும் நமது பாவ சுபாவத்தை நாம் அதிகமதிகமாக அறிந்துகொள்ளுவதற்கு கற்றுக்கொண்டு,[1] அதினால் பாவம் அழிக்கப்படுவதிலும், கிறிஸ்துவில் நமது நீதியைத் தேடுவதிலும் அதிக அக்கறையைக் காட்டுபவர்களாக மாறும்படிக்கு[2] பத்துக்கட்டளைகள் மிகவும் கண்டிப்புடன் பிரசங்கிக்கப்படவேண்டும் என்று தேவன் விரும்புகிறார்; அதேபோல், வரப்போகின்ற வாழ்க்கையில் நமக்காக முன்மொழியப்பட்டிருக்கிற பரிபூரணத்தை நாம் அடையும்வரை,[3] தேவனுடைய சாயலுக்கு நாம் ஒப்பானவர்களாக இன்னும் அதிகமதிகமாய் மாறும்படிக்கு தொடர்ச்சியாக உழைக்கவும், பரிசுத்த ஆவியானவருடைய கிருபைக்காக தேவனிடத்தில் ஜெபிக்கவும் பத்துக்கட்டளைகள் மிகவும் கண்டிப்புடன் பிரசங்கிக்கப்படவேண்டும் என்று தேவன் விரும்புகிறார்.

[1] 1 யோவான் 1:9; ரோமர் 3:20; 5:13; 7:7

[2] ரோமர் 7:24

[3] 1 கொரி 9:24; பிலி 3:12-14

# ஜெபம்

## கர்த்தருடைய நாள் 45

**கேள்வி: 116. கிறிஸ்தவர்களுக்கு ஜெபம் ஏன் அவசியம்?**

**பதில்**: தேவன் நம்மிடத்தில் எதிர்பார்க்கின்ற நன்றியுணர்வின் முக்கிய பகுதியாக ஜெபம் இருப்பதினாலே,[1] ஜெபம் நமக்கு மிகவும் அவசியமானதொன்றாக இருக்கிறது; அதுமட்டுமல்லாமல், தேவனுடைய கிருபையையும், அவருடைய பரிசுத்த ஆவியையும் யார் மனமுவந்த விருப்பத்தோடு தொடர்ச்சியாக அவரிடத்தில் கேட்டு,[2] அவைகளுக்காக நன்றி செலுத்துகிறார்களோ அவர்களுக்கு மட்டுமே அவர் அவைகளைத் தருகிறார். ஆகவே கிறிஸ்தவர்கள் ஜெபிப்பது மிக அவசியம்.

[1] **சங்** 50:14, 15

[2] **மத்** 7:7, 8; **லூக்** 11:9, 13; **மத்** 13:12; **சங்** 50:15

**கேள்வி:117. தேவனாலே ஏற்றுக்கொள்ளப்பட்டு, அவர் செவிசாய்க்கக்கூடிய அந்த ஜெபத்தின் அவசியக்கூறுகள் யாவை?**

**பதில்**: முதலாவதாக, தம்முடைய வார்த்தையில் தன்னை வெளிப்படுத்தியிருக்கிற[1] உண்மையான ஒரே தேவனிடத்தில் மட்டுமே, அவரிடத்தில் கேட்கவேண்டுமென்று அவர் கட்டளையிட்டிருக்கிற சகல காரியங்களுக்காகவும்[2] நாம் நம்முடைய இருதயத்திலிருந்து ஜெபிக்கவேண்டும். இரண்டாவதாக, அவருடைய தெய்வீக மாட்சிமைக்கு முன்பாக நாம் நம்மை மிகவும் தாழ்த்தும்படிக்கு,[3] நம்முடைய தேவையையும் நிர்பந்தத்தையும் சரியாகவும் முழுமையாகவும் அறிந்துவைத்திருக்கவேண்டும். மூன்றாவதாக, நம்டைய ஜெபங்கள் கேட்கப்படுமளவிற்கு நாம் தகுதியற்றவர்களாக இருந்தாலும்,[4] நம்முடைய ஆண்டவராகிய கிறிஸ்துவினிமித்தம், தேவன் தம்முடைய வார்த்தையில் நமக்கு வாக்குப்பண்ணியிருக்கிறபடி,[5] நம்முடைய ஜெபத்தை நிச்சயமாய் கேட்டருளுவார்[6] என்பதை முழுமையாக நம்பவேண்டும்.

[1] யோவான் 4: 22, 23

[2] ரோமர் 8:26; 1 யோவான் 5:14

[3] யோவான் 4:23, 24; **சங்** 145:18

[4] 2 நாளா 20:12

[5] ரோமர் 10:13; 8:15,16; **யாக்** 1:6; யோவான் 14:13; **தானி** 9:17,18; **மத்** 7:8; **சங்** 143:1

[6] **சங்** 2:11; 34:18,19; **ஏசா** 66:2

**கேள்வி**:118. **தேவனிடத்தில் கேட்கும்படிக்கு அவர் நமக்கு கட்டளையிட்டுள்ளவைகள் எவை?**

**பதில்**: நம்முடைய ஆண்டவராகிய கிறிஸ்துதாமே நமக்குக் கற்பித்திருக்கிற ஜெபத்தில் உள்ளடங்கியிருக்கிற,[1] நம்முடைய ஆத்துமாவிற்கும் சரீரத்திற்கும் அவசியமான அனைத்துக் காரியங்களுக்காகவும்[2] நாம் ஜெபிக்கவேண்டுமென்று தேவன் கட்டளையிட்டுள்ளார்.

[1] **மத்** 6:9-13; **லூக்** 11:2-4

[2] **யாக்** 1:17; **மத்** 6:33

**கேள்வி**:119. **கிறிஸ்து கற்பித்த அந்த ஜெபத்தின் வார்த்தைகள் யாவை?**

**பதில்**: பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக; உம்முடைய ராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக. எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும். எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும், ராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே, ஆமென்.

## கர்த்தருடைய நாள் 46

**கேள்வி:120. தேவனை "எங்கள் பிதாவே" என்று அழைக்கும்படிக்கு கிறிஸ்து ஏன் நமக்கு கட்டளையிட்டுள்ளார்?**

**பதில்:** நமது ஜெபத்தின் அஸ்திபாரமாக இருக்கக்கூடிய கிறிஸ்துவின் மூலம் தேவன் நம்முடைய பிதாவாக இருக்கிறபடியினாலே,[1] நமது ஜெபத்தின் ஆரம்பத்திலேயே ஒரு குழந்தையைப்போல மரியாதையையும், நம்பிக்கையையும் நாம் அவர் மீது வைக்கும்படிக்கும், அதினால் பூமிக்குரிய காரியங்களை நமக்கு அளிப்பதற்கு நமது பெற்றோர்கள் மறுத்தாலும், உண்மையான விசுவாசத்தோடு நம் பரலோக பிதாவினிடத்தில் நாம் கேட்கும் எதனையும் நமக்கு அருளுவதற்கு அவர் மறுக்கமாட்டார்[2] என்று நம்மை ஊக்குவிக்கும்படிக்கே தேவனை "எங்கள் பிதாவே" என்று அழைக்கும்படிக்கு கிறிஸ்து நமக்கு கட்டளையிட்டுருக்கிறார்.

[1] மத் 6:9

[2] மத் 7:9-11; லூக் 11:11; ஏசா 49:15

**கேள்வி:121. "பரமண்டலங்களிலிருக்கிற" என்று ஏன் இங்கு சேர்க்கப்பட்டுள்ளது?**

**பதில்.** தேவனுடைய பரலோக மாட்சிமையைக்[1] குறித்த எந்தவொரு பூமிக்குரிய கற்பனையையும் நாம் உருவாக்கக்கூடாது; மேலும் நம்முடைய ஆத்துமாவிற்கும் சரீரத்திற்கும் தேவையான அனைத்தையும் அவருடைய சர்வ வல்லமையுள்ள ஆற்றலிலிருந்தே நாம் எதிர்பார்க்கவேண்டும்[2] என்பதை வலியுறுத்துவதிற்காகவே "பரமண்டலங்களிலிருக்கிற" பிதா என்று இங்கு சேர்க்கப்பட்டுள்ளது.

[1] எரே 23:24

[2] அப் 17:24; ரோமர் 10:12

## கர்த்தருடைய நாள் 47

**கேள்வி**:122. **முதலாவது விண்ணப்பம் எது**?

**பதில்**. உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக[1] என்பதே முதலாவது விண்ணப்பம்; அதாவது, முதலில் உம்மை சரியாக அறிந்துகொள்ளுவதற்கும்,[2] உம்முடைய வல்லமையும், ஞானமும், நீதியும், இரக்கமும், சத்தியமும் தெளிவாகக் காட்டப்பட்டிருக்கிற[3] உமது சகல கிரியைகளிலும் உம்மை உயர்த்தவும், மகிமைப்படுத்தவும், துதிக்கவும்; மேலும் உம்முடைய நாமம் ஒருபோதும் தூஷிக்கப்படாமல், எங்களால் கனப்படுத்தப்பட்டு, துதிக்கப்படும்படிக்கு,[4] நாங்களும் எங்களது முழு வாழ்க்கையையும், எண்ணங்களையும், வார்த்தைகளையும், செயல்பாடுகளையும் ஒழுங்குசெய்து நல்வழிபடுத்துவதற்கும் எங்களுக்கு சகாயம்பண்ணியருளும் என்பதே முதலாவது விண்ணப்பமாகும்.

[1] **மத்** 6:9

[2] **யோவான்** 17:3; **எரே** 9:23, 24; **மத்** 16:17; **யாக்** 1:5

[3] **சங்** 119:137, 138; **லூக்** 1:46; **சங்** 145:8, 9

[3] **சங்** 115:1; 71:8

## கர்த்தருடைய நாள் 48

**கேள்வி**: 123. **இரண்டாவது விண்ணப்பம் எது**?

**பதில்**. உம்முடைய ராஜ்யம் வருவதாக[1] என்பதே இரண்டாவது விண்ணப்பம்; அதாவது, நாங்கள் எங்களை உமக்கு அதிகமதிகமாய் கீழ்ப்படுத்தும்படிக்கு[2] உம்முடைய வார்த்தையினாலும் ஆவியினாலும் எங்களை ஆண்டுகொள்ளும்; உம்முடைய சபையை பாதுகாத்து விருத்தியடையச் செய்தருளும்;[3] மேலும் நீர் சகலத்திலும் சகலமுமாய் இருக்கப்போகும்[4] உம்முடைய ராஜ்யத்தின் முழு பரிபூரணமும் உண்டாகும் வரைக்கும்,[5] சாத்தானுடைய கிரியைகளையும்,[6] உமக்கு எதிராக தன்னை உயர்த்திக்கொள்ளும் எல்லா சீர்கேடுகளையும், உம்முடைய வார்த்தைக்கு விரோதமாய் எழும்பி நிற்கும் எல்லா துர் ஆலோசனைகளையும் அழித்தருளும் என்பதே இரண்டாவது விண்ணப்பமாகும்.

[1] **மத்** 6:10

[2] **சங்** 119:5

[3] **சங்** 51:18

[4] 1 **கொரி** 15:15, 28

[5] **வெளி** 22:17, 20

[6] 1 **யோவான்** 3:8; **ரோமர்** 16:20

## கர்த்தருடைய நாள் 49

**கேள்வி:124. மூன்றாவது விண்ணப்பம் எது?**

**பதில்**: உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக[1] என்பதே மூன்றாவது விண்ணப்பம்; அதாவது, நாங்களும் மற்ற எல்லா மனிதர்களும் எங்களுடைய சுய விருப்பத்தை கைவிட்டு,[2] எந்தவொரு முறுமுறுப்பும் இல்லாமல் உம்முடைய சித்தத்திற்குக் கீழ்ப்படியும்படிக்கு[3] எங்களுக்கு சகாயம்பண்ணியருளும்; உம்முடைய சித்தம் மட்டுமே நன்மையானது. மேலும் பரலோகத்திலே தூதர்கள் செய்வதைப்போல,[4] ஒவ்வொருவரும் விருப்பத்துடனும் உண்மையோடும் தங்களது நிலை மற்றும் அழைப்பின் கடமைகளை செயல்படுத்தும்படிக்கும்[5] எங்களுக்கு அநுக்கிரகம் செய்தருளும் என்பதே மூன்றாவது விண்ணப்பமாகும்.

[1] மத் 6:10

[2] மத் 16:24; தீத்து 2:12

[3] லூக் 22:42

[4] சங் 103:20

[5] 1 கொரி 7:24; எபே 4:1

## கர்த்தருடைய நாள் 50

**கேள்வி:125. நான்காவது விண்ணப்பம் எது?**

**பதில்**: எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்[1] என்பதே நான்காவது விண்ணப்பம்; அதாவது, எல்லா நன்மைகளின் ஒரே ஊற்றாக நீர் இருக்கிறீர்[2] என்பதை நாங்கள் அறிந்துணரும்படிக்கு, சரீரத்திற்குத் தேவையான அனைத்துக் காரியங்களையும் எங்களுக்கு அளிப்பதில் பிரியம்கொள்ளும்;[3] உமது ஆசீர்வாதம் இல்லாமல் எங்களது நலனும், தொழிலும், உம்முடைய வரங்களும்கூட எங்களுக்கு எந்தவொரு ஆதாயத்தையும் உண்டுபண்ண முடியாது;[4] ஆகவே படைப்புகள் எல்லாவற்றின் மீதும் நாங்கள் வைத்திருக்கிற நம்பிக்கையை விலக்கிக்கொண்டு, அதனை உம்மீது மட்டுமே வைக்கும்படிக்கு[5] எங்களுக்கு சகாயம்பண்ணும் என்பதே நான்காவது விண்ணப்பமாகும்.

[1] **மத்** 6:11

[2] **அப்** 17:25; 14:17

[3] **சங்** 145:15; **மத்** 6:25, 26

[4] 1 **கொரி** 15:58; **உபா** 8:3; **சங்** 127:1, 2

[5] **சங்** 62:11; 55:22

## கர்த்தருடைய நாள் 51

**கேள்வி:126. ஐந்தாவது விண்ணப்பம் எது?**

**பதில்**: எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்[1] என்பதே ஐந்தாவது விண்ணப்பம்; அதாவது, எங்களுக்காக சிந்தப்பட்ட கிறிஸ்துவினுடைய இரத்தத்தினிமித்தம், இந்த ஏழை பாவிகளது மீறுதல்களையும், எங்களோடு எப்போதும் ஒட்டிக்கொண்டிருக்கிற சீர்கேட்டையும்[2] எங்கள்மீது சுமத்தாதிரும்; எமது அயலகத்தாரை நாங்கள் எங்களுடைய இருதயத்திலிருந்து மன்னிப்பதற்கு[3] உம்முடைய கிருபையின் இந்த சான்று ஓர் உறுதியான தீர்மானமாக எங்களுக்குள் இருப்பதை நாங்கள் உணருகிறோம் என்பதே ஐந்தாவது விண்ணப்பமாகும்.

[1] **மத்** 6:12

[2] **சங்** 51:1; 1 **யோவான்** 2:1, 2

[3] **மத்** 6:14, 15

## கர்த்தருடைய நாள் 52

**கேள்வி:127. ஆறாவது விண்ணப்பம் எது?**

**பதில்**: எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும்[1] என்பதே ஆறாவது விண்ணப்பம்; அதாவது, எங்களால் ஒரு கணம் கூட நிற்க முடியாத அளவிற்கு நாங்கள் பெலவீனர்களாக இருக்கிறோம்.[2]

அது தவிர, எங்களுடைய அழிவுற்குரிய எதிரிகளாகிய சாத்தானும்,[3] உலகமும்,[4] எங்களுடைய சொந்த மாம்சமும்[5] எங்களை ஓயாது தாக்குவதினாலும், இந்த ஆவிக்குரிய போராட்டத்தில் நாங்கள் அவைகளினால் மேற்கொள்ளப்பட்டுவிடாமல், முழுமையான வெற்றியை இறுதியில் நாங்கள் அடையும்வரைக்கும்[6] எங்களுடைய எதிரிகளைத் தொடர்ந்து கடுமையாக எதிர்க்கும்படிக்கு,[7] உம்முடைய பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினால் எங்களைப் பாதுகாத்து பெலப்படுத்தும் என்பதே ஆறாவது விண்ணப்பமாகும்.

[1] மத் 6:13

[2] ரோமர் 8:26; சங் 103:14

[3] 1 பேது 5:8

[4] எபே 6:21; யோவான் 15:19

[5] ரோமர் 7:23; கலா 5:17

**கேள்வி:128. உங்களுடைய ஜெபத்தை நீங்கள் எவ்வாறு நிறைவுசெய்கிறீர்கள்?**

**பதில்**: ராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே;[1] அதாவது, நீர் எங்களுடைய ராஜாவாகவும் சர்வ வல்லமையுள்ளவராகவும் இருந்து, எல்லா நன்மைகளையும் எங்களுக்கு அருளுவதற்கு விருப்பமுடையவராகவும், அருளக்கூடியவராகவும் இருக்கிறபடியினாலே[2] இவையனைத்தையும் நாங்கள் உம்மிடத்திலே

கேட்கிறோம். மேலும் இதன் மூலம் நாங்கள் அல்ல, மாறாக உமது பரிசுத்த நாமமே என்றென்றைக்கும் மகிமைப்படும்படிக்கு[3] இவையனைத்தையும் நாங்கள் உம்மிடத்தில் ஜெபித்துக்கேட்டுக்கொள்கிறோம் என்று கூறி எங்களுடைய ஜெபத்தை நிறைவுசெய்கிறோம்.

[1] மத் 6:13

[2] ரோமர் 10:12; 2 பேது 2:9

[3] யோவான் 14:13; சங் 115:1; பிலி 4:20

**கேள்வி:129. ஆமென் என்ற சொல் எதைக் குறிக்கிறது?**

**பதில்**: இது உண்மையாகவும், நிச்சயமாகவும் அப்படியே ஆகக்கடவது என்பதையே ஆமென் என்ற சொல் குறிக்கிறது; ஏனெனில் நான் தேவனிடத்தில் இந்தக் காரியங்கள் அனைத்தையும் விரும்புகிறேன் என்று எனது இருதயத்தில் நான் உணருவதைவிட, என்னுடைய ஜெபம் தேவனாலே அதிக நிச்சயமாக கேட்கப்படும்.[1]

[1] 2 கொரி 1:20; 2 தீமோ 2:13